Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

லிபியா:
அணைக்கவும் ஒளிரவும் வைக்கும் எண்ணெய்

NAZHIKAI
London

OCTOBER 2011

# நாழிகை

International Tamil Newsmagazine




## பென் பவிங்

## டச்சு தமிழ் மகன்



தாகம் நீங்கிட
சுவை ததும்பும் குளிர்பானங்கள்
Niru BRAND
UFC
Coconut Water
Natural Rehydration
5 Essential Electrolytes
Niru BRAND
FALUDA
Mambo
Premium
Mango
Juice Drink
1 Liter
புதிய அறிமுகம்!!
இன்றே வாங்குங்கள் நிருவின்
இயற்கைச் சுவையுடைய பானங்களை!!
Niru
Nelli
Pineapple
Mango
Fruito
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது....
Imported & Marketed By
NIRU EUROPE LTD
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP
மேலதிக விபரங்களுக்கு
Tel: 020 8640 8228
Email: sales@niru.co.uk


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

# தீபம்

உலகத் தமிழர்களுக்கு ஒரு தொலைக்காட்சி

# DEEPAM

www.deepamtv.tv

Tel: 0044 (0)208 814 6565


12 | இலங்கை
நிழலாக தொடரும்
போர்க்குற்ற அச்சுறுத்தல்

22 | அமெரிக்கா
அரசியலில் அவதியுறும்
பொருளாதார நெருக்கடி

28 | இந்தியா
ஓகஸ்ட் புரட்சி



14 | உலக விவகாரம்
லிபியா
அணைக்கவும்
ஒளிரவும் வைக்கும்
எண்ணெய்



33 | சிறப்பு கட்டுரை
மீண்டும் ஒரு
சிலுவைப் போர்?


42 | சிறுகதை
பிளேட்

38 | அட்டை செய்தி
பென் பவிங்க்
ஒரு தமிழ்க் குரல்



46 | சினிமா

அட்டை புகைப்படம்:
கே. கிருஷ்ணராஜா




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933
Vol: VI, No: 4
**Editor:** S Mahalingasivam
**Published by:**
Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 728 2334**
**Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com

**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6
**Tel: 416 613 2770**

**Anual Subscription** (12 issues): **UK** £22.00 **Europe** £30.00
**Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# மஹிந்த சிந்தனை

பெரும்பான்மை, சிறுபான்மை இன மக்கள் வாழ்ந்தாலும் இலங்கை, கட்சி அரசியலுடனான ஒரு ஜனநாயக முறைமையைக் கொண்டது. அந்த கட்சி அரசியலில், நாட்டின் இருபெரும் பெரும்பான்மைக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை 'மஹிந்த சிந்தனை' என்று முதன்முதலாக, தனிமனிதர் ஒருவரின் 'சிந்தனையாக' வெளியிட்டு, தேர்தலில் வென்று, ஆட்சியையும் அமைத்தவர் மஹிந்த ராஜபக்ஷ. அரசியலில் அவருக்கு ஓர் 'இராஜயோகமாக', நடக்க இயலாதவை என்று நம்பப்பட்டவையெல்லாம் அவரது ஆட்சிக் காலத்தில் நடக்கின்றன.

தனக்கு அமைவானவராக அமைவார் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, திரு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்தினார். அதிலிருந்து அவரின் இராஜயோகம் ஆரம்பித்தது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று எடுத்த முடிவு மஹிந்த பக்ஷவின் வெற்றிக்கு வழிசமைத்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைவிட, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அவரை எளிதாக தம்மால் கையாள முடியலாம் என்று பிரபாகரன் பெரும்பாலும் எண்ணியிருக்கவேண்டும். இதில், வேறு சமரசங்களும் இருதரப்பினரிடையேயும் நிகழ்ந்ததாகவும் பேசப்படுகிறது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலும் ஜனாதிபதி பதவியிலும் அமர்வதற்கு காரணமான இருவருமே இன்று அரசியல் அரங்கிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். முன்னர் பதவியிலிருந்த ஜனாதிபதிகளைவிடவும் கூடுதல் அதிகாரங்களுடன் மஹிந்த ராஜபக்ஷ இன்று பதவியிலிருக்கிறார். அத்துடன், அரசியலில் இயற்கையான நெருக்கடிகள் எதுவுமின்றி, தனக்கு வேண்டிய, சாதகமான நெருக்கடிகளைச் சிருஷ்டித்தும் வைத்திருக்கிறார்.

சமாதானத்துக்கான நோபல் பரிசினும்பார்க்க, சர்வதேச போர்க்குற்றச்சாட்டை தன்னுடைய அரசியலுக்கு வாய்ப்பாக தேர்ந்தவர். இதனை அவர் நாட்டினதும், மக்களினதும் நலனுக்கான தேர்வு என்றேதான் சொல்வார். எனின், அந்த நாடு எது? யார் அந்த மக்கள்?

'பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது; இனி நாடு சுபீட்சமடையும். வெளிநாடுகளிலுள்ள பயங்கரவாதிகள் அதனையும் தடுக்க முயல்கிறார்கள்' என்று சொல்வதில், மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் அரசியல் வரலாற்றை தெரிந்துகொள்ளாதவரோ அல்லது புரிந்துகொள்ளாதவரோ அல்லர். ஆனால், 'நான் ஓர் அரசியல்வாதியேயன்றி, அரசியல் கனவான் அல்ல' என்று வெளிப்படையாகவே அவர் கூறியதாக அரசியல் நண்பர் ஒருவர் தெரிவித்த கூற்றின் வெளிப்பாடுதான் இது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் ஜனாதிபதி ராஜபக்ஷ தமிழ் மக்களின் நிராகரிப்பையே பெரிதும் கண்டார். அதில் அவர், நாட்டின் ஜனாதிபதியாக அந்த மக்களின் நிராகரிப்புக்கான நியாயத்தைத் தேடுவதினும்பார்க்க, தன்னை ஆதரிக்கும் மக்களின் அரவணைப்பையே விரும்பினார். தமிழர் பிரச்னைக்கான ஒரு தீர்வைக் காணவல்ல அவர், நியாயமான ஒரு தீர்வாக என்றில்லாவிடினும், ஒரு குறைந்தபட்ச தீர்வையேனும்கூட முன்வைக்க விரும்பவில்லை.

பதிலாக, பாராளுமன்ற தெரிவுக்குழுமூலம் ஒரு தீர்வை முன்வைக்க முடிந்தால், தான் அதற்கு பொறுப்பேற்காத நிலையில், அந்த தீர்வை முன்வைப்பதற்கு தயார் என்ற நிலைப்பாட்டைக்கொண்டிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.


ஆனால், யுத்தத்தை வெற்றிகொண்டபின்னர் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளிக்கவில்லை என்பதைவிடவும், தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்கான அடிப்படையாகக்கொண்ட 'தமிழ்த் தேசியம்' என்பது அவர்கள் வாழும் பிரதேசத்தை சார்ந்ததாகும்போது, அதனை நிர்மூலமாக்கிவிடுவதில் அவரது அரசாங்கம் மேற்கொள்ளும் தீவிரமான நடவடிக்கைகள் நீதியற்றவை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசமாக கோரும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்ப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், அதையெல்லாம் உதாசீனம்செய்து, இன்று யாழ்ப்பாணம் உள்பட, தமிழர் பிரதேசமெல்லாம் அந்த தேசிய கோட்பாட்டை அவர்கள் இழக்கும் அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்திலேயே பிரதமர் டி. எஸ். சேனநாயக்க இந்த அபகரிப்பு நடவடிக்கையை ஆரம்பித்தார். தொடர்ந்து, கடந்த அறுபது ஆண்டுகளில் தமிழர்கள் தமது பிரதேசங்களை பெருமளவில் இழந்த அதேவேளை, தமது உரிமைகளை இன்னமும் வெல்ல இயலாதவர்களாகவுமேயிருக்கிறார்கள். எனினும், ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி, இன சௌஜன்யத்துடன் பெற்றிருக்கக்கூடியதினும் மேலான சுபீட்சத்தையும் நிம்மதியையும் மகிழ்வையும் நாட்டுக்கும் சிங்கள மக்களுக்குமேனும் அளித்திருக்கின்றனவா?

உலகில் அதி சக்திவாய்ந்த தீவிரவாத இயக்கம் ஒன்று இலங்கைத் தமிழர்களிடையே உருவாகும் என்று ஐம்பதுகளிலே டி. எஸ். சேனநாயக்கவும், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவும் எண்ணியிருப்பார்களா?

ஆக, இப்போது மஹிந்த ராஜபக்ஷ நினைப்பதும் எப்படியோ? ஆனால், இதுவேதான் அந்த நாட்டின் நியதியாக வேண்டுமா? இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இப்போது இலங்கைத் தமிழர்களின் அரசியலை முன்னெடுப்பவர்களின் விசுவாசமும்கூட கேள்விகளுக்கு அப்பால்பட்டதல்ல.




# இறந்தாய் வாழி

மறைந்தார் எம். எவ். ஹுசைன்; மீண்டிருக்கிறது இந்திய ஓவியக் கலையின் கௌரவம்.

கிறுக்கல்களை நவீன ஓவியம் என்று கொண்டாடும் கலை நுணுக்கங்களை அறியாத, அழகுணர்வு இல்லாத 'ரசிகர்கள்' என்று சொல்லிக்கொண்ட கும்பல், அவரை உச்சத்தில்வைத்துக் கொண்டாடியது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்றால், கிறுக்கரை...?

ஹுசைனை இந்தியாவின் பிகாசோ என்று போற்றுபவர்கள் இந்தியாவையும் பிகாசோவையும் ஒருசேர அவமானப்படுத்துகிறார்கள். ஹுசைன் வரைந்தது ஆபாசம். திமிர்த்தனமாய்ப் பேசியதும் அதிகம். அவர் இந்துக் கடவுள்களை ஆபாசமாக வரைந்த பண்பாட்டுக் கொலைகாரர். 'பத்ம' விருதுகளை அவருக்குக் கொடுத்து, விருதுகளைத் தரம்தாழ்த்திய குற்றத்துக்கு ஆளானது இந்திய அரசு.

இந்துக்கள் ஹுசைனைப் பார்த்து ஒரேயொரு கேள்விதான் கேட்டார்கள்: "பாரத மாதாவையும் இந்துக் கடவுள்களையும் நிர்வாணமாகவும் ஆபாசமாகவும் வரைந்தீரே, உம்முடைய தாய், மனைவி, மகள், உம் குரு, அவருடைய மனைவிமார்களையும் இதேபோல் வரைவீரா?'' அவர் பேச்சிலோ, தன் ஓவியங்களிலோ இதற்குப் பதில் சொல்லியிருக்கவேண்டுமே? மூச்!

இந்திய அரசியலைப் பிடித்து ஆட்டும் வியாதியான பொய்மை 'செக்கூலரிசம்', எம். எவ். ஹுசைன்மூலம் கலை உலகையும் தொற்றிக்கொண்டது. அரசியல் இன்னும் மாறவில்லை. இந்திய பாரம்பரிய ஓவியத்துறை இனியாவது பாழ்படாமலிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். எம். எவ். ஹுசைன் இறந்துவிட்டார்; அதனால் அவர் வாழ்க!

– ஆர். நடராஜன்
சென்னை

சில வரிகளில்

# உலகம்

அச்சாகிய வேளையில்...




## கடாபி கொல்லப்பட்டார்



பதவி விலக்கப்பட்ட லிபிய தலைவர் கேணல் கடாபி, அவரது பிறந்த நகரான சேர்றாவில் ஒக்ரோபர் 20ஆம் தேதி கொல்லப்பட்டார்.

மூன்று வாரங்களாக அவரின் ஆதரவாளர்களுக்கும் திவிரவாதிகளுக்குமிடையே சேர்றாவில் தீவிர மோதல் இடம்பெற்றபோது, கடாபியும் அவரது ஆதரவாளர்களதும் சென்ற வாகனங்கள் நேட்டோ விமானங்களின் குண்டு தாக்குதலுக்கு சேதமாயின.

பின்னர், கடாபி ஆதரவாளர்களுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான துப்பாக்கிச் சமரில் காயமுற்ற கடாபி, வீதி மதகு ஒன்றினுள் ஒளிந்தபோது தீவிரவாதிகளால் உயிருடன் கைப்பற்றப்பட்டார்.

இராணுவ பாணி உடையிலிருந்த கடாபி, தன்னைக் கொல்லவேண்டாம் என்றும், 'நான் உங்களுக்கு என்ன செய்தேன்' என்றும் கேட்டதாக அவரைக் கைப்பற்றிய தீவிரவாதிகள் தெரிவிக்கின்றனர்.




மதகினுளிருந்து அவரை வெளியே கொணர்ந்து, ட்ரக் ஒன்றின் முன்புறத்தில் இரத்தக்கறைகளில் தோய்ந்த அவரை அழுத்துவது முதலான கைத்தொலைபேசிகளில் பதிவான காட்சிகள் வெளியாகியுள்ளன.


வீதிகளில் அவர் இழுத்துச் செல்லப்படுவதும் தெரிந்தாலும், அது உயிருடனா அல்லது இறந்தபின்னரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர் வழியிலேயே மரணமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. கடாபியின் மரணத்தை லிபியாவின் இடைக்கால அரசு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியது.

கூடவே, அவரது இரு புதல்வர்களும் மரணமடைந்திருக்கிறார்கள். கடாபியிடமிருந்து தங்கத்தினாலான கைத்துப்பாக்கியும் ஒன்று கைப்பற்றப்பட்டது.

# அறிவிலே புதியன





SPL

## பொய்பேசும் கண்களுக்கு புதிய சவால்!

### பாவனைக்கு வருகிறது புதிய கருவி

விஞ்ஞானம் பொய்பேசுபவர்களையும் விட்டுவைக்கவில்லை. பொய்பேசும்போது உடலில் ஏற்படும் நுண்ணிய உணர்வலை மாறுதல்களை துல்லியமாக பதிவுசெய்யும் திறன்கொண்ட ஒளிப்பதிவு கருவி இங்கிலாந்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒருவர் உண்மை பேசும்போதும் பொய் கூறும்போதும் அவரது முகத்திலும் கண்களிலும் ஏற்படும் மாறுதல்களையும் வேறுபாடுகளையும் இந்த ஒளிப்பதிவு கருவி பாகுபடுத்தி பதிவுசெய்கிறது.

உண்மையை மறைத்தலையும் பொய்பேசுவதையும் சில உடலியல் மாறுதல்களை அவதானித்து ஊகித்துக்கொண்டாலும், அதனை உறுதிசெய்வதற்கான விஞ்ஞான முனைப்பு 1895இல் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. பொய்பேசும்போதும் உணர்ச்சிவசப்படும்போதும் இரத்த அழுத்த உயர்வு அவதானிக்கப்பட்டு, அதனைப் பதிவுசெய்து வரையும் முறை அப்போது அறிமுகமானது.


இதனைத்தொடர்ந்து, 'பொலிகிராம்' என்று அழைக்கப்படும் இரத்த அழுத்தம், சுவாசம், இதயத்துடிப்பு அல்லது நாடித்துடிப்பு ஆகியவற்றின் வேக விகிதத்தை ஒப்பிடுவதன்மூலம் பொய்கூறுவதைக் கண்டுகொள்ளும் அமைப்புகளும் நிறுவனங்களும் தோன்ற ஆரம்பித்தன. உடற்கூற்று மாறுதல்களை ஒளிப்பதிவுமூலம் இலகுவாக பதிவுசெய்து, பொய் கூறுவதை கண்டறிய உதவும் இந்த புதிய கருவியின் அறிமுகம் இந்த துறை எட்டியிருக்கும் புதிய சாதனை.

பொய் பேசும்போதோ அல்லது உண்மைக்கு மாறானதை வெளிப்படுத்தும்போதோ, விருப்பாலும் சுய அறிவின் கட்டுப்பாட்டை மீறியும் உடல் ஏற்படுத்தும் நுண்ணிய மாறுதல்களை தந்திரமாக பாகுபடுத்தி பதிவுசெய்வதில் வெற்றிகண்டிருப்பதால் பொய் பேசுவதைக் கண்டறியமுடியும் என்று விஞ்ஞானம் இறுமாப்புக்கொள்கிறது. மேலதிக நேரமெதுவும் செலவிடாது நுணுக்கமாக, ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போதே அவர் கூறுவது உண்மை அல்லது பொய் என்பதை இந்த புதிய கருவி வகைப்படுத்துகிறது என்று கடந்த மாதம் நடைபெற்ற பிராட்போர்ட் விஞ்ஞான கண்காட்சியில் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தன்னார்வ தொண்டர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்பின்னர் இந்த உணர்வு பதிவாக்கும் கருவி வடிவமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒருவர் கூறுவது உண்மையா, பொய்யா என்பதைக் கண்டறிவதில் அதிக ஆர்வம் காட்டும் குற்றவியல் துறையே இந்த கண்டுபிடிப்பில் அக்கறைகொண்டுள்ளது. பிரித்தானிய குடிவரவு கட்டுப்பாட்டு துறையான எல்லை முகவர் நிறுவனத்தை இந்த கருவி மிகவும் கவர்ந்துள்ளது. இதேவேளை, விஞ்ஞான கண்டுபிடிப்புகளை மதிப்பீடுசெய்யும் ஆய்வாளர்களின் பெரும் சந்தேகத்துக்கும் இக்கருவி இலக்காகியிருக்கிறது. புதிய கருவியினால் பதிவாக்கப்படும் உணர்வலை மாறுதல்கள் ஏற்படுவதற்கு வேறு காரணங்களும் இருக்கக்கூடும் என்பது அவர்கள் வாதம்.

குற்றவியல் அல்லது வேறு விசாரணைகளுக்கு ஆளாக நேரிட்டதன் விளைவால் தோன்றக்கூடிய விசனம், கவலை, அவமானம் போன்றவையும் உணர்வலை மாறுதலுக்கு காரணமாகலாம் என்று கூறும் அவர்கள், தண்டனைக்குள்ளாகக்கூடுமோ என்ற அச்சத்தினாலும் கண்களிலும் முகத்திலும் உணர்வலை மாற்றம் தோன்றலாம் என்று ஆட்சேபிக்கிறார்கள்.



# வேண்டும், இரண்டாவது சுதந்திர போராட்டம்

**பெரிய இடமல்லவா? விசாரிக்கவேண்டிய அரசுத் துறையினரும் விமரிசிக்கவேண்டிய பத்திரிகைகள், தொலைக்காட்சி அமைப்புகளும் ராஜகுடும்பப் பிரமுகரைப் பொத்திப் பொத்தி வைத்திருக்கின்றன**

ஊழலோ ஊழல் என்று புலம்புகிறீர்களே, தொலைவில் எங்கும் செல்லவேண்டாம்; கையருகே, காலடியில் பார்த்தால் போதும் என்கிறார், நம் நிலைமையைக்கண்டு நொந்துபோன ஒரு வெளிநாட்டு விமரிசகர். அவர் சுட்டிக் காட்டும் நபர் வேறு யாருமில்லை. றொபர்ட் வத்ரா; சோனியாவின் மாப்பிள்ளை, பிரியங்காவின் கணவர்.

றொபர்ட் வத்ரா பற்றிய விவரங்கள் இவருக்குத் தெரிந்த அளவுக்கு நம் மக்களுக்குத் தெரியவில்லை; ஏன்? பெரிய இடமல்லவா? விசாரிக்கவேண்டிய அரசுத் துறையினரும் விமரிசிக்க வேண்டிய பத்திரிகைகள், தொலைக் காட்சி அமைப்புகளும் ராஜகுடும்பப்

**தேசபக்தியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது; இறக்குமதித் தலைவி நாட்டை ஆண்டால் இதுதானே கதி!**

பிரமுகரைப் பொத்திப் பொத்தி வைத்திருக்கின்றன என்கிறார் 'யூரியூபி'ல் தன் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ள அந்த வெளிநாட்டுக்காரர். அவரின் பதிவுகளின் சாரம்:

இந்தியாவில் வெகுவேகமாக வளர்ந்துவரும் அதி கோடீஸ்வரர்களில் ஒருவர் றொபர்ட் வத்ரா. பத்து வருடங்களில் பல கோடிகள் புரளும் தொழில்களின் அதிபதி. இந்திய பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் இவரை விமர்சிக்க மிகவும் பயப்படுகின்றன. ஏனென்றால், இவர் சோனியா காந்தி என்று அழைக்கப்படும் இந்தியாவின் அரசியல் தரகரான அன்டோனியோ மெய்னோவின் மாப்பிள்ளை. இவர் சாதாரண தொழிலதிபர் அல்லர். அடுத்த பிரதமராகக்கூடும் என்று பேசப்படுபவர். இவரது அபார வளர்ச்சியைப் பார்ப்பதற்கு முன்னர், இவரது குடும்ப பின்னணிபற்றியும் தெரிந்துகொள்வோமா?

தந்தை ராஜேந்தர் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர். தாயார் ஸ்கொட்லாந்துப் பெண்மணி. இவர், 1969ஆம் வருடம் பிறந்தவர். முதலில், தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களை வாங்கி விற்றவர். அந்தக் காயலான் கடை வியாபாரத்தில் பெரிய அளவு லாபம் இருக்க முடியாது. ஆனால், கடந்த பத்து வருடங்களில் பெரிய தொழிலதிபராக வளர்ந்திருக்கிறார், அரசியல் தொடர்பினால். இவரது முதல் தொடர்பு போஃபோர்ஸ் பீரங்கி விற்பனைத் தரகரான குத்ரோஷி. அவர்மூலம் பிரியங்காவின் நட்பு கிடைத்தது. அப்புறம் அபார வளர்ச்சி.

இவர் பிரியங்காவைத் திருமணம்செய்துகொண்டது 1997இல். பின்னர், தொழிலில் ஏறுமுகம். ஆனால், அடுத்த சில வருடங்களில் சந்தேகத்துக்கிடமான சூழலில் இவரது சகோதரர் உயிரிழந்தார். ஒரு சாலை விபத்தில் சிக்கி இறந்தார் இவரது சகோதரி. தந்தை தற்கொலை செய்துகொண்டார். எல்லாச் செய்திகளுமே அடக்கி வாசிக்கப்பட்டன. வேறு குடும்பங்களில் இந்த நிகழ்வுகள் பெரும் சர்ச்சைகளை கிளப்பிவிட்டிருக்கும். ஆனால், இந்திய பத்திரிகைகள் தம் நாட்டின் ராஜகுடும்பத்துக்கு இழுக்கு சேர்க்க விரும்பவில்லை. விசாரணை அமைப்புகளுடன் பத்திரிகை முதலாளிகளும் சேர்ந்து, பல சம்பவங்களை மூடிமறைத்துவிட்டார்கள். இந்தக் காலகட்டத்தில்தான் றோபர்ட் வத்ரா பிரமாண்டமாக வளர்ந்தார்.

சமீபத்தில் 'எக்கனாமிக்ஸ் ரைம்ஸ்' மற்றும் சில வணிகப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள்மூலமே இவரது தொழில் முனைவுகள் பற்றி ஓரளவுக்குத் தெரியவந்துள்ளது. றோபர்ட் வத்ராவுக்கு டெல்லியின் ஹில்ட்டன் கார்டன் ஹோட்டலில் கணிசமான பங்கு உண்டு. பல உள்நாட்டு நிறுவனங்களில் கணிசமான பங்குகள் உண்டு. வெளிநாட்டு நிறுவனங்களிலும் வணிக தொடர்புகள் உண்டு. குறிப்பாக, டெல்லியில் உள்ள டிஎல்எப் என்ற 'றியல் எஸ்ரேற்' நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவர். இது, நாட்டின் மிகப் பெரும் றியல் எஸ்ரேற் நிறுவனம். கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஊழல் என்று பரவலாகப் பேசப்பட்டபோதும், அப்போதைய ஒலிம்பிக்ஸ் குழுத் தலைவரான சுரேஷ் கல்மாதியை விசாரணை அமைப்புகள் நெருங்கவில்லை.

அரசாங்க சட்ட திட்டங்கள் இவருக்கு வளைந்துகொடுத்து, இவரது வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்திய விமான நிலையங்களிலும் வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரகங்களிலும் இவருக்கு தனி சலுகை எழுத்து பூர்வமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி, உப ஜனாதிபதி, பிரதமர் முதலிய 33 அதிமுக்கிய பிரமுகர்களுக்கு பதவி காரணமாக விமான நிலையங்களில் பாதுகாப்பு சோதனை இல்லை. அவர்கள் நேரே விமானத்தில் சென்று அமரலாம். இந்திய தூதரகங்களிலும் இவர்களுக்கு பாதுகாப்புச் சோதனை விதிவிலக்கு சலுகை உண்டு. இதே சலுகை றோபர்ட் வத்ராவுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லா விமான நிலையங்களிலும் பாதுகாப்புச் சோதனைக்கு விலக்கானவர்கள் பற்றிய அறிவிப்புப் பலகையில் வத்ராவின் பெயரையும் பார்க்கலாம். இவரது உடைமைகளும் சோதனை செய்யப்படுவதில்லை. (இந்தச் சலுகை இருந்தால் இந்தியாவிலிருந்து எதையும் கடத்திக் கொண்டு போகமுடியும். இதை எந்த இந்திய அரசியல்வாதியும் இதுவரை எதிர்த்ததாக தெரியவில்லை.)

றோபர்ட் வத்ரா எந்தவிதமான அரசாங்க பதவியிலும், பொறுப்பிலும் இல்லை. கௌரவ பதவியும் கிடையாது. பின், ஏன் இந்தச் சிறப்புச் சலுகை? இத்தாலியில் விலைமதிப்பற்ற இந்திய பழம்பெரும் பொருள்கள் கிடைக்கின்றன. இவர் இத்தாலியில் இப்படிப்பட்டதொரு கடை வைத்திருக்கிறார்.

றோபர்ட் வத்ராவுக்கு யூனிரெக் நிறுவனத்தில் பங்குகள் உண்டு என்கிறார் பெயரை வெளிக்காட்டாத இந்த அயல்நாட்டுச் செய்தியாளர். அதுமட்டுமல்ல, பல நிறுவனங்களில் பிணையற்ற கடன் பெருமளவில் வாங்கியிருக்கிறார். கலைஞர் ரிவியில் பங்குதாரர் என்ற பிணையற்ற கடன் வாங்கியதற்காக இன்று கனிமொழி சிபிஐயின் பிடியில் திஹார் சிறையில். இதேமுறையில் பணம்திரட்டியுள்ள றோபர்ட் வத்ரா ஹோட்டல்கள் வைத்திருக்கிறார்; சொந்த விமானங்கள் வைத்திருக்கிறார். அவற்றை வாடகைக்குவிட்டு சம்பாதிக்கிறார்; ஒரு புகாரும் இல்லை. மகிழ்ச்சியுடன் வெளியில் இருக்கிறார்.


இதே செய்தியாளர் சொல்கிறார்: "சிபிஐயின் கரங்கள் இவரை நெருங்க முடியாது. சிபிஐயை இயக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கை அந்தப் பதவியில் நியமித்ததே இவரது மாமியார்தானே. இதையெல்லாம் தட்டிக்கேட்கவேண்டியவர்கள் நூறு கோடி இந்திய மக்கள். எகிப்தில், துனிஷியாவில் வெடித்ததுபோல் இந்தியாவிலும் மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும்; இரண்டாவது சுதந்திர போராட்டம் பிறக்க வேண்டும்; காந்தி போன்றவர்களால், போலி காந்தியகளால் அல்ல.''

வெளிநாட்டு செய்தியாளரின் வருத்தமான, அழுத்தம் திருத்தமான குரலை வீடியோவில் கேட்கும்போது, 'வெட்கம் பிடுங்கித் தின்கிறது' என்ற அவமான உணர்வு வருகிறது. ஊழல் எதிர்ப்பையும் தேசபக்தியையும் இன்று வெளிநாட்டவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருப்பது கேவலமான நிலைமை அல்லவா? அதைவிட அவலம், இன்னமும் நாம் துடிக்காமல், வெடிக்காமல் இருப்பது.

தேசபக்தியை இறக்குமதிசெய்ய வேண்டியிருக்கிறது; இறக்குமதித் தலைவி நாட்டை ஆண்டால் இதுதானே கதி! ■



Nalli 80 YEARS SINCE 1928
First and the Finest
Nalli®
பைரவி
கலெக்ஷன்
Code No.BH09001
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com
• சென்னை • பெங்களூரு • கோயம்புத்தூர் • தில்லி • ஐதராபாத் • மதுரை • மும்பை • திருச்சி • திருநெல்வேலி • சிங்கப்பூர் • USA



இலங்கை

# நிழலாக தொடரும் போர்க் குற்ற அச்சுறுத்தல்

## மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அரசு பலிக்கடாவாக்க முயல்கிறது?

தண்டாயுதன்

ஆட்டுக் கடாவைப் பலியிடக் கொண்டு செல்லும்போது அதன் வாய்க்கருகே இலை குழைகளைக் காட்டியவாறே அதனைக் கூட்டிச் செல்வார்கள். ஏனெனில், முரண்டு பிடிக்காமல் பலியிடப்படும் இடத்தை நோக்கி செல்லவே அவ்வாறு செய்வார்கள். அப்பாவி ஆடும் ஏதோ உணவு கிடைக்கப்போவதாக ஏமாந்து, காட்டிச் செல்லும் இலை குழைகளுக்குப் பின்னால் சென்று, இறுதியில் தலை வெட்டப்பட்டு பலிக்கடாவாகி விடும்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பிரதி நிரந்தர பிரதிநிதி பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் ஒரு 'பலிக்கடா'வின் நிலையிலேயே தற்போது காணப்படுகிறார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் புலிகளுக்கெதிரான இறுதிக் கட்ட யுத்தத்தில் பங்கேற்ற முக்கிய படைத் தளபதிகளில் ஒருவரே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா. இன்று ஒரு சிறைக் கைதியாகவிருக்கும் அன்றைய இராணுவ தளபதி சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரது கட்டளைகளுக்குப் பணிந்து, வன்னிப் போரின் இறுதி நகர்வுகளை மேற்கொண்டவர்களில் ஒருவராக இருந்ததோடு மட்டுமல்லாது, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அதீத நம்பிக்கைக்குரியவராகவும் சவேந்திர சில்வா பணியாற்றினார்.

யுத்தம் முடிவுற்றதுமே பிரிகேடியர் தரத்திலிருந்து மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார் சவேந்திர சில்வா. யுத்தத்தின் பின்னர் பெரிதும் அரசாங்கத்தின் ஊதுகுழலாக இருப்பதே இவரது பணியாக இருந்தது. யுத்தம் முடிவுற்றதும் அது நடத்தப்பட்ட விதம், புலிகளைப் போரில் வெற்றி கொண்டவிதம் என்பவைபற்றி அரசாங்கம் உலக அளவில் பிரசாரம் செய்துவந்தது. கொழும்பில் மாநாடுகள், கருத்தரங்குகளை நடாத்தி வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள், ராஜதந்திரிகளை அழைத்து இறுதிக்கட்ட யுத்தம் பற்றி விளக்கங்களையும் அரசு வழங்கியது. அப்போதெல்லாம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பங்களிப்பு முக்கியமானதாகவிருந்தது. இதனைத் தொடர்ந்து, அவர் ஒரு இராஜதந்திரியாகவே இலங்கை அரசினால் மாற்றஞ்செய்யப்பட்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதி வதிவிட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜதந்திர சேவையில் இல்லாதவர்களும், இராணுவ சேவையில் இருப்பவர்களும்கூட இலங்கையின் இராஜதந்திர சேவையில் வெளிநாட்டு தூதுவர்களாக நியமிக்கப்பட்டிருப்பதை இப்பொழுது அவதானிக்கமுடியும். இதன்காரணமாக, பலதரப்பட்ட சர்வதேச விவகாரங்களை இலங்கையினால் சரிவர கையாள இயலாதிருப்பதான குற்றச்சாட்டுகளும் அவ்வப்போது எழுகின்றன. ஆனால், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் ஐ. நா.

நியமனம், அவர் ஒரு பகடைக்காயாக - பலிக்கடாவாக இலங்கை அரசினால் நிறுத்தப்பட்டுள்ளதையே காண்பிக்கிறது.

ஐ. நா. வின் நிரந்தர வதிவிட பிரதிநிதியாக இலங்கையின் முன்னாள் சமாதான செயலக இயக்குநர் டாக்டர் பாலித கோஹண கடமையாற்றுகிறார். இவரின் துணைப் பிரதிநிதியாக சவேந்திர சில்வா பதவிவகிக்கிறார். யுத்தத்தை வெற்றிகொண்டதுபற்றி பெரிதாக இலங்கை அரசு பறைசாற்றிவரும் அதேவேளை, யுத்த காலத்தில் இடம்பெற்ற கொடுமைகள், அட்டூழியங்கள் என்பவை இலங்கை அரசை ஒரு நிழலாக தொடர்ந்து வருவதை இலங்கை மீதான அண்மைக்கால சர்வதேச அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன. பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சிமூலமாக உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இலங்கையில் யுத்த காலத்தின்போது இடம்பெற்ற கொடுமைகள் நன்கு தெளிவுற காண்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்ககூட கடந்த ஜூலை மாதம் கொழும்பில் நீதியரசர் கே. பாலகிட்ணர் நினைவுப் பேருரையை நிகழ்த்தியபோது, 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற சனல்-4 தொலைக்காட்சி ஒளிபரப்பு பற்றி தன்னுடையதும் தன்னுடைய பிள்ளைகளதும் மனநிலையை மிகுந்த துயரத்துடன் வெளிப்படுத்தியிருந்தார். பல்வேறு நாடுகளின் பாராளுமன்றங்களிலும் இந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு காண்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஐ. நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட முன்னாள் இந்தோனேஷிய சட்ட மா அதிபர் தஸ்ருமன் தலைமையிலான இலங்கை பற்றிய நிபுணத்துவ குழு அறிக்கையும் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதாக இருந்தது.

இதுதவிர, அண்மையில் ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு பலத்த நெருக்கடி எற்பட்டது. இத்தகைய அழுத்தங்கள் இலங்கை அரசை ஒரு பிராந்திய அரசியல் சூழலிலிருந்து சர்வதேச அரசியல் சுழற்சிக்குள் புகுத்திவிட்ட தன்மையே தற்சமயம் காணப்படுகிறது. இந்தியாவும் சீனாவும் தத்தமது பிராந்திய நலன்களின்பொருட்டு இலங்கையை நன்கு பயன்படுத்துகின்றன. தமது பிடிக்குள் இலங்கையை வைத்திருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களிலும் சீனாவும் இந்தியாவும் ஏட்டிக்குப் போட்டியாக தம்மை ஈடுபடுத்துகின்றன. இதன் காரணமாக இலங்கைக்கு இந்த இரு நாடுகளுமே பக்கபலமாக இருக்கின்றன.

ஆனால், அமெரிக்கா உள்பட பெரும்பாலான மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் யுத்தம் முடிவடைந்ததுமே இலங்கைமீது ஏற்பட ஆரம்பித்ததையடுத்தே ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு செய்வதறியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளரான அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர்மீது சர்வதேச நீதிமன்றில் போர்க் குற்றங்கள் குறித்து வழக்கு தொடரப்படலாம் என்ற ஊகங்களும் வெளியாகியிருந்தன. எனவே, சர்வதேச அழுத்தங்கள் இலங்கை அரசுமீது கனமாக இருப்பதன் காரணமாக அதற்குத் தாக்குப் பிடிக்கும் வகையிலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் சவேந்திர சில்வா மூலமாகவே இறுதிக்கட்ட யுத்தம்பற்றிய குற்றச்சாட்டுக்களை மறுக்கச் செய்கின்ற அதேசமயம், மறுபுறத்தில் தமக்கு வரக்கூடிய நேரடித் தாக்கங்களைத் தடுக்க அவரை ஒரு கவசமாகவும் பயன்படுத்தவே மஹிந்த ராஜபக்ஷ அரசு திட்டமிட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. இத்தடவை ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த கூட்டத் தொடருக்கு ஜனாதிபதியும் அவரது பரிவாரத்தினரும் நியூயோர்க் சென்றிருந்தனர். ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பொறுத்தவரை மேற்குலக நாடுகளுக்கான பயணங்கள் என்பது அவரது வயிற்றில் புளியைக் கரைப்பதாக இருக்கிறதென்றே சில அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். ஒரு வருடத்துக்கு முன்னர் லண்டனுக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்க கூட்டத்தில் உரையாற்றச் சென்ற ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கசப்பான அநுபவங்கள் ஏற்பட்டன. லண்டன் விமான நிலையத்தில் அவருக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் இலங்கைத் தமிழர்களால் நடாத்தப்பட்டன. பின்னர், அவரது ஒக்ஸ்போர்ட் நிகழ்வும் தடங்கலுக்குள்ளாகியிருந்தது. மேற்குலகில் எங்கெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் ராஜபக்ஷ அரசுக்கெதிரான கோஷங்களே எழுகின்றன

இம்முறை ஐ. நா. கூட்டத் தொடருக்கு சென்றபோதிலும்கூட வீண் சர்ச்சைகளைத் தவிர்க்கும் விதத்தில் அவர் நியூயோர்க்குக்கு வெளியே செல்வதைப் பெரிதும் தவிர்த்திருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆயினும், அவரை நிழலாகத் தொடரும் சர்வதேச அழுத்தங்கள், இலங்கை அரசின் ஐ. நா. துணைப் பிரதிநிதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை விட்டுவைக்கவில்லை. ஐ. நா. கூட்டத்தொடர் இடம்பெற்ற தருணத்திலேயே நீதிமன்றமொன்றினால் இலங்கையில் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணையின் பொருட்டு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பிடியாணை வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அல்லது அவரது சகோதரரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது போடப்படக்கூடிய பொறியில் சவேந்திர சில்வா தற்போது மாட்டியுள்ளார். இத்தகையதொரு நிலைமையை எதிர்பார்த்த நிலையிலேயே அரசினால் தந்திரமான முறையில் தயார்செய்யப்பட்டாரோ என்ற ஐயமும் வலுவடைந்துள்ளது. தம்மீதான அழைப்பாணை பற்றி கருத்து வெளியிட்ட சவேந்திர சில்வா, இலங்கைமீதான களங்கத்தை அகற்ற தமக்கு கிடைத்த சந்தர்ப்பமாக தாம் இதனைக் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தையே பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கூறியுள்ளார்.

நியூயோர்க் நீதிமன்ற விசாரணைகளில் சவேந்திர சில்வாவுக்கு உதவுவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டுள்ளதாகவும், அவர் ஒரு ராஜதந்திரிக்குரிய அனைத்து விசேட சட்டங்களுக்கும் உரித்துடையவரெனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும், சவேந்திர சில்வாமீதான நியூயோர்க் நீதிமன்ற அழைப்பாணை இலங்கையில் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்படும் விழிப்புணர்வை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இலங்கை அரசு தன்மீது ஏற்படக்கூடிய சர்வதேச தாக்கங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய பலிக்கடாவாக ஐ. நா. வில் சவேந்திர சில்வாவை நிறுத்தியுள்ளது. ஆனால், சவேந்திர சில்வா எவ்வாறு நிலைமைகளைக் கையாளப்போகிறார் என்பதற்கு அவர்மீதான நியூயோர்க் நீதிமன்ற நடவடிக்கை ஒரு நல்லுதாரணமாக அமையமுடியும். ■



# கடாபியின் ஆட்சிக்கு முடிவுகட்ட காரணமாக அமைந்த லிபியாவின் எண்ணெய்வளமே புதிதாக மலர்ந்துள்ள லிபிய மக்களாட்சியின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும்

ராஜாஜி

**கடாபி செயலிழக்காத அல்லது கொல்லப்படாத நிலையில்; அவரது ஆதரவு படையினர் முற்றுமுழுதாக முறியடிக்கப்படாத சூழ்நிலை காணப்படும்வரையில், லிபியாவின் சுதந்திரமும் மக்களாட்சியும் நிரந்தரமானது என்று கூறுவதற்கில்லை**

# அணைக்கவும் ஒளிரவும் வைக்கும் எண்ணெய்





இயந்திரங்களின் இயக்கத்தை மட்டுமன்றி, உலகின் அதிகார போக்கையும் தீர்மானிக்கும் வல்லமை எண்ணெய் வளத்துக்கு உண்டு என்ற உண்மை தற்போது லிபியாவில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அரபு மற்றும் ஆபிரிக்க நாடுகளின் கவர்ச்சிமிக்க தலைவனாகவும் ஆபிரிக்க நாடுகளின் உறுதியான குரலாகவும் ஒலித்துவந்த லிபியாவின் புரட்சித் தலைவர் மும்மார் கடாபியை விரட்டிய மேற்குலக பின்புலத்துடனான மக்கள் புரட்சி வெற்றியடைந்து, மக்களாட்சியை நோக்கி சுதந்திர லிபியா நகர்ந்து கொண்டிருக்கிறது.


மீண்டும் புதிதாக பிறந்துள்ள லிபியா தன்னை வளர்த்தெடுக்க மேற்குலகிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கிறது. கடாபியின் ஆட்சி காரணமாக தடுத்துவைக்கப்பட்ட லிபியாவின் 150 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகளை விடுவித்து புதிய லிபியா வளர்ச்சியடைய மேற்குலகு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் விடுமளவுக்கு லிபியாவின் இடைக்கால நிர்வாகத்துக்கு மேற்குலகின் ஆதரவும் அநுசரணையும் வெகுவேகமாக கிட்டியிருக்கிறது. இதே ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2009ஆம் ஆண்டு கூடியபோது அங்கு ஆவேசத்துடன் உணர்ச்சிகரமாக உரைநிகழ்த்திய கடாபி, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையை பல்வேறு நாடுகளில் தாக்குதல் நடத்தும் அல்கைடா போன்ற பயங்கரவாத அமைப்பு என்று குற்றஞ் சாட்டியிருந்தார்.

மேற்குலக ஆதிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகளை கொள்ளையடித்ததாகவும் காட்டமாக சாடியதோடு, ஐ. நா. சாசனத்தின் பிரதியை கிழித்தெறிந்து, ஆதிக்க நாடுகள் 7.7 டிரில்லியன் அமெரிக்க டொலர் நட்ட ஈடு வழங்க வேண்டுமென்றும் முழங்கினார்.

மிக நீண்ட காலமாக ஓர் அடக்கு முறை ஆட்சியை மேற்கொண்டு, பயங்கரவாதியென்றும் குற்றஞ்சாட்டப்பட்ட கடாபி, பின்னர் சமரசத்துடன் மேற்குலகத்தால் அரவணைக்கப்பட்டமைக்கும், அதன்பின்னர் அவருக்கு எதிரான புரட்சிக்கு துணையாகி, குறுகிய காலத்தில் புதிய புரட்சி ஆட்சிக்கு மேற்குலகின் அங்கீகாரம் கிட்டியமைக்கும் லிபியாவின் கொழுத்த எண்ணெய் வளம் என்ற ஒரே காரணமே பதிலாக அமைகிறது.

கடந்த 42 ஆண்டு காலமாக ஆட்சி அதிகாரத்தை தனது இறுக்கமான பிடிக்குள் கொண்டிருந்த கடாபிக்கு எதிரான புரட்சித் தீப்பொறி இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே பற்றத் தொடங்கியது. லிபியாவின் எண்ணெய் வளம் மிகுந்த வடக்கு பகுதியான பென்காசியில் அது முதலில் கொழுந்துவிட்டெரிந்தது. எண்ணெய் ஏற்றுமதியால் ஈட்டப்பட்ட பெருந்தொகைப் பணத்தையும் ஏராளமான தங்க சேகரிப்பையும் நிதிவளமாகக் கொண்டிருந்த கடாபி, தனது முழு நிதி வளங்களையும் பயன்படுத்தி புரட்சியை முறியடிக்க தயாரானார். பாரிய ஆயுத கொள்வனவுடன் பெருந்தொகைப் பணத்தையும் விநியோகித்து புரட்சியை முறியடிக்கும் முனைப்புகளை கடாபி மேற்கொண்ட நிலையில், அவரது ஆட்சியை எதிர்த்து போரிடுவது வடக்கு லிபிய புரட்சியாளர்களுக்கு இலகுவானதாக இருக்கவில்லை. இங்குதான் எண்ணெய் வளமும் அதன்மீது மேற்குலகுக்கிருக்கும் அதீத தேவையும் புரட்சிவாதிகளுக்கு கைகொடுத்தது.

பென்காசியின் எண்ணெய் வயல்களை தமது கட்டுப்பாட்டுக்குள்



**கடாபி, தனது 42 ஆண்டுகால அடக்குமுறை ஆட்சியின்போது தன்னுடையதும் தனது நாட்டினதும் பாதுகாப்புக்காக சேகரித்த ஆயுதங்களில் பெரும்பாலானவை காணாமல்போயுள்ளமை மேற்குலகை கவலைகொள்ள வைத்திருக்கிறது**

கொண்டுவந்த புரட்சிப் படையினர், நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் பீப்பாக்களாக வீழ்ச்சிகண்டிருந்த எண்ணெய் உற்பத்தியை மீண்டும் மூன்று லட்சம் பீப்பாக்களாக உயர்த்துவதாக உறுதியளித்தார்கள்.

தடையற்ற எண்ணெய் ஏற்றுமதியை தமது நிர்வாகத்தால் வழங்க முடியும் என்றும் அதனால் பெறப்படும் வருமானத்தில் தமது எதிர்கால அரசுக்குத் தேவையான பல கோடி டொலர் பெறுமதியான ஆயுத கொள்வனவை மேற்கொள்ளப்போவதாகவும் மேற்குலகு நம்பிக்கையூட்டப்பட்டது. கடாபி அரசுக்கு எதிரான போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக உலகின் மொத்த எண்ணெய் ஏற்றுமதியின் 2 சதவீதமான, நாளொன்றுக்கு 16 லட்சம் பீப்பா எண்ணெயை லிபியா ஏற்றுமதி செய்திருந்தது.

கடாபிக்கு எதிரான போராட்டத்தின்போது எண்ணெய் ஏற்றுமதி தடைபடாதிருக்கும் என்று லிபிய எண்ணெய் உற்பத்தியில் 70 வீதத்தை வழங்கும் வடக்கு கிழக்கு பகுதிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருந்த புரட்சிவாதிகள் வழங்கிய உறுதிமொழி மேற்குலகின் கவனத்தைப் பெற்றது. அதிலும், மிகவும் தூய்மையான அல்லது கந்தகம் குறைவான அதாவது, சுற்றாடலை மாசுபடுத்தும் கரிய புகையை குறைவாகவே கொண்ட சிறந்த தரமான எண்ணெயை லிபியாவிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யும் பிரித்தானியாவையும் பிரான்ஸையும் இந்த அறிவிப்பு கூடுதலாக சிந்திக்கத் தூண்டியது.

லிபியாவின் உள்நாட்டுப்போர் தொடர்ந்தும் நீடித்தால் உலக எண்ணெய் விநியோகம் தடைப்படும் என்றும், போர் முடிந்தாலுங்கூட நிலைமை வழமைக்குத் திரும்ப மேலும் பல மாதங்கள் ஆகலாம் என்றும் அனைத்துலக எரிசக்தி மையமும் தனது எச்சரிக்கை மணியை அடித்தது.

மறுபுறத்தில், புரட்சிவாதிகளுடன் போரிடுவதற்கு பெருமளவு பணத்தை மக்களுக்கு விநியோகிப்பதிலும் கடாபி நிர்வாகம் முனைப்பு காட்டி, ஆதரவாக செயல்படுபவர்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் டொலர்களுடன் வாகனம் மற்றும் ஆயுதங்கள் வழங்கி, ஆள்திரட்டும் பணி வேகமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலே புரட்சிவாதிகளுடனான இரகசிய பேச்சுக்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் ஈடுபட்டது. உள்நாட்டில் பல்வேறு அரசியல் நெருக்கடிகளில் சிக்கியும், யூரோ நாணயம் எதிர்கொண்டுள்ள சவாலை முறியடிப்பதற்கு கடுமையான பிரயத்தனங்களையும் மேற்கொண்டிருந்த பிரான்ஸ், லிபியாவின் எண்ணெய் விநியோக தடையினால் ஏற்படக்கூடிய கூடுதல் நெருக்கடிகளை எதிர்கொள்ள தயாராக இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டிருக்கும் பல்வேறு சமூக விவகாரங்களுடன் போராடிவரும் பிரித்தானியாவின் புதிய தலைவர் டேவிட் கமரோனின் நிலையும் அதுவாகவே இருந்தது. எனவே, லிபிய அரசியல் அரங்கில் காட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திரைமறைவு நகர்வுகள் இடம்பெறத் தொடங்கின.

நேட்டோ படையினரை லிபிய புரட்சிவாதிகளுக்கு ஆதரவாக களமிறக்குவதற்கு அவசியமான அனுமதியைப் பெறுவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டன. கடாபியைக் கவிழ்க்க போரிட்டுவந்த புரட்சிவாதிகளுக்கு நிதியையும் ஆயுதங்களையும் மேற்குலகு தாராளமாகக் கொட்டியது.

லிபியத் தலைவர் கடாபியின் படையுடன் தரையில் மோதிய புரட்சிவாதிகளின் விமானப் படையாக 'நேட்டோ' எனப்படும் வட அத்தலாந்திக் கூட்டமைப்பு நாடுகளின் வான்படை பணியாற்றி, இலக்குகளைக் குண்டுவீசி தகர்த்தது. முடிவாக, பொருளாதார பலம்கொண்ட லிபியாவின் 42 ஆண்டு கால ஆட்சியாளர் கடாபி, மேலும் அதிகாரத்தை தொடரும் கனவை எதிராளிகள் எண்ணெய்வள ஆக்கிரமிப்பாளரின் உதவியோடு தகர்த்தெறிந்த நிகழ்வு பதிவானது.

லிபியாவை நீண்டகால அடக்குமுறை ஆட்சியில் நிலைநிறுத்தியிருந்த புரட்சித் தலைவர் கேணல் மும்மார் கடாபிக்கு எதிரான புரட்சியை வெற்றிகொண்ட லிபிய இடைக்கால நிர்வாகம், தற்போது இருமுனைப் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது. கடாபியை விரட்டுவதற்கு நடத்திய போரின் வடுக்களைப் போக்கி, புதிய நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி செயல்படும் அதேவேளை, கடாபியின் படையை முற்றுமுழுதாக நிர்மூலமாக்கி அவரைக் கைப்பற்றுவது அல்லது கொல்லுவது என்ற சமாந்தரமான போராட்டங்களில் அது ஈடுபடவேண்டியுள்ளது.

லிபியாவின் இடைக்கால நிர்வாகிகளாக மாற்றமடைந்துள்ள புதிய புரட்சியாளர்களின் தாக்குதல்கள் தற்போது கடாபியின் சொந்த மண்ணில் தீவிரமடைந்திருக்கின்றன. கடாபியின் பிறந்த இடமான சேற்றா பகுதியில் அவரும் அவரது குடும்பத்தினரும் உள்ளார்களா என்பதை நிச்சயமாக உறுதிசெய்யமுடியாத இடைக்கால நிர்வாக அல்லது புரட்சிப் படையினர், அங்கு கடும் மோதலில் ஈடுபடுவாதாக களமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பகுதிகளில் வாழும் மக்கள் கடாபி ஆதரவு படையினரால் பணய கைதிகளாக்கப்பட்டிருக்கும் அதே வேளை, அந்தப் பகுதிகளை முழுமையாக கட்டுப்படுத்தியிருக்கும் கடாபி ஆதரவு படையினர் பள்ளிவாசல்கள், மருத்துவ மனை, பொது கட்டடங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றிலிருந்தே தாக்குதல்களை மேற்கொள்வதாகவும் விபரிக்கப்படுகிறது. சர்வதிகார ஆட்சி அதிகாரத்திலி ருந்து லிபியா ஏறத்தாழ முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தாலும் புதிய ஆட்சியாளருக்கான அச்சுறுத்தலும் ஆபத்தும் முழுமையாக நீங்கவில்லை என்பது உறுதியாக உணரப்பட்ட நிலையிலேயே கடாபியின் பூர்வீக மண்மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

தனக்கு மிகமிக விசுவாசமானவர்களுடன் மறைந்திருந்து பாரிய தாக்குதலை நெறிப்படுத்துவதற்காக கடாபி நாட்டைவிட்டு வெளியேறாதிருக்கக்கூடும் என்ற இடைக்கால ஆட்சியாளரின் சந்தேகத்தையும் இந்த தாக்குதல்களின் தீவிரம் வெளிக்காட்டுகிறது.

லிபிய தலைநகர் திரிப்பொலியிலிருந்து சில நூறு மைல்கள் தொலைவிலுள்ள சபா பாலைவனப் பகுதியில் கடாபி மறைந்திருக்கலாம் என்ற சந்தேகமும் இடைக்கால ஆட்சியாளர்களுக்கு உண்டு. இந்த பகுதியில் செறிந்து வாழும் கடாபியின் சொந்த இடமான கடாப்பா இன பூர்வீக மக்கள் தம்மை உண்மையாக பாதுகாப்பார்கள் என்று கருதி கடாபி அங்கு மறைந்திருக்கலாம் என்பது அவர்களின் எண்ணம். ஆபத்து நெருங்கும் பட்சத்தில் சபா பாலைவனப் பகுதியிலிருந்து இலகுவாக தெற்கு நோக்கி நகர்ந்து பல்வேறு வழிகளில் தப்பிச்செல்லமுடியும் என்பதால் கடாபி அந்த இடத்தைத் தெரிவு செய்திருக்கக்கூடும் என்பதும் அவ்வாறான எண்ணத்துக்குக் காரணம்.

லிபியாவில் மறைந்திருந்து, எதிர்த் தாக்குதலை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை கடாபி மேற்கொள்ளக்கூடும் என்று கருதி அதனை முறியடிப்பதற்கு மலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் பாலைவனப் பகுதியில் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருக்கும் நிலையில், அவர் வேறொரு ஆபிரிக்க நாட்டில் தஞ்சமடைந்திருக்கலாம் என்ற மாறுபட்ட யூகமும் லிபிய மக்கள் மத்தியிலும் ராஜதந்திர மட்டங்களிலும் உலவுகின்றது.

கடாபி எங்கே என்ற, பலகோடி டொலர் பெறுமதியான கேள்விக்கு பதில்கிடைக்காது திணறும் இடைக்கால அரசாங்கத்தை அரபு செய்தி நிறுவனங்கள் மேலும் குழப்பத்தில் ஆழ்த்திவருகின்றன. அல்ஜீரிய அதிபர் அப்துல் அஸீஸ் புற்றபிலிக்காவை கடாபி தொலைபேசியில் தொடர்புகொண்டு தஞ்சம்கோர முயற்சித்ததாக அல்ஜீரிய பத்திரிகையான 'எல் வற்றான்' செய்தி வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கடாபியின் மனைவியும் அவரது மூன்று பிள்ளைகளும் அல்ஜீரியாவில் அடைக்கலம் கோரியதன் பின்னரே கடாபி இந்த அழைப்பை மேற்கொண்டதாகவும் துனிசியா மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளுட னான எல்லைப் பகுதியிலிருந்தே இந்த அழைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்த அல்ஜீரிய செய்திப் பத்திரிகை, குறித்த தொலைபேசி அழைப்பு எப்போது மேற்கொள்ளப்பட்டதென்பதை தெரிவிக்கவில்லை. எனினும், கடாபிக்கு தஞ்சமளிக்கப் போவதில்லை என்று அல்ஜீரியா வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது.

கடாபி தமது நாட்டுக்குள் நுழையும் பட்சத்தில், அவர் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கப்படுவார் என்று அல்ஜீரிய அமைச்சரவையில் அதிபர் புற்றபிலிக்கா கூறியதாக மற்றொரு நாளிதழ் 'எல் பொறூக்' செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நைஜர் நாட்டுக்குள் நுழைந்த லிபிய இராணுவ வாகன தொடரணியில் கடாபியும் இருந்திருக்கலாம் என்று வெளியான செய்தியும் பின்னர் நைஜர் அரசினால் மறுக்கப்பட்டது. கடாபி தஞ்சம் கோரக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்ட ஈட் நாடும் லிபிய இடைக்கால அரசுக்கு அங்கீகாரம் வழங்கி, அதனை ஏற்றுக்கொண்டுவிட்டது.

நெருங்கிய நட்புறவுகொண்ட வெளிநாடு எதுவும் கடாபிக்கு தஞ்சம் வழங்குவதிலும் சில ராஜதந்திர நெருக்கடிகள் காணப்படுகின்றன. நீண்ட கால சர்வாதிகார ஆட்சியின்பின்னர் அண்மையில் மக்களாட்சிக்கு திரும்பியிருக்கும் நைஜர், கடாபியை ஏற்றுக்கொள்வதன் மூலம் உலக அரங்கில் தனது பெயரைக் கெடுத்துக்கொள்ள விரும்பாது. இன்னொருவகையில், மேற்குலக நாடுகளுடன் ஏற்கெனவே முரண்பட்ட நிலையிலுள்ள சூடான், சிம்பாப்வே அல்லது தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் ஒன்று கடாபியை ஏற்றுக்கொள்ளலாம் என்ற கருத்தும் நிலவுகின்றபோதிலும், இந்த நாடுகளை விமானமூலம் சென்றடைவது கடாபிக்கு இலகுவானதாக அமையாது என்பதும் நோக்கற்பாலது.

'கடாபி எங்கே; அவரது நடவடிக்கை எவ்வாறிருக்கும்' என்ற கேள்விகளுக்கு விடைகாணவேண்டிய இடைக்கால அரசுக்கு, போராட்ட காலத்தில் தவறிய அல்லது காணாமல் போன ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் முழு தீவிரமாக செயல்பட வேண்டிய தேவையும் உள்ளது.

லிபியாவின் ஆயுதக் களஞ்சியங்களிலிருந்து காணாமல்போன அல்லது கடாபி ஆதரவு படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்கள் எங்கே எவரது கரங்களை சென்றடைந்திருக்கின்றன என்பதில் மேற்குலகமும் பரபரப்படைந்திருக்கிறது. லிபியாவின்

அயல் நாடுகளாகவுள்ள அதே வேளை, இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளும் அல்கைடாவும் தீவிர மாக செயல்பட்டுவரும் நைஜர், மாலி, அல்ஜீரியா போன்ற நாடுகளை அவை சென்றடைந்திருப்பதற்கான வாய்ப்புகள் நம்பகமாகவே காணப்படுகின்றன.

தரையிலிருந்து தரையைத் தாக்கும் வல்லமைகொண்ட ரஷ்ய தயாரிப்பு ஏவுகணைகள், சாம் ரக எறிகணைகள், விமானங்களை வீழ்த்தவல்ல ஏவுகணைகள் உள்பட, தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் லட்சக்கணக்கான ஆயுதங்கள் லிபியாவின் ஆயுத கிட்டங்கிகளிலிருந்து மறைந்திருக்கின்றன. கடாபி, தனது 42 ஆண்டுகால அடக்குமுறை ஆட்சியின்போது தன்னுடையதும் தனது நாட்டினதும் பாதுகாப்புக்காக சேகரித்த ஆயுதங்களில் பெரும்பாலானவை காணாமல்போயுள்ளன என்பது மேற்குலகை கவலைகொள்ள வைத்திருக்கிறது. இவற்றில் ஒரு பகுதியை வீடுகளிலிருந்தும் கட்டடங்களிலிருந்தும் மக்கள் புரட்சிப்படை மீட்டிருந்தாலும், கணிசமானவை கடாபி ஆதரவு படையினரால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. கடாபி ஆதரவு படையினரிடம் மட்டுமன்றி, லிபியாவில் இயங்கும் ஏனைய இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் கரங்களிலும் இந்த ஆயுதங்கள் சிக்கியிருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நடவடிக்கையின் முதல்படியாக பாதுகாப்பு கட்டமைப்பை வெகு நேர்த்தியாக நிறுவவேண்டிய அவசியமானதும் இடைக்கால நிர்வாகத்தின் தோளில் வலிதரும் மிகக் கனமான சுமையாகும். ஆயுத கிடங்கில் காணப்படும் சக்திமிக்க ஆயுதங்களைக் கொண்டிருந்த கொள்கலன்கள் அனைத்தும் வெறுமையாக இருப்பது கவலை தருகிறது என்றும்; மிக ஆபத்தான ஆயுதங்கள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டதாகவும் கூறும் மனித உரிமைகள் அமைப்பு, அவற்றைக் கண்டெடுப்பதுவே புதிய அரசாங்கத்தின் தலையாய பணி என்று கோரிக்கை விடுத்துள்ளதும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

போர்க்காலத்தில் தவறிய ஆயுதங்கள் ஏற்படுத்தும் அனர்த்தங்களும், போருக்குப் பிந்திய நாடொன்றின் பாதுகாப்புச் சீர்குலைவு, அமைதியின்மை என்பனவும் பல நாடுகள் கற்றுக்கொண்ட கசப்பான அனுபவ பாடங்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையை மேற்குலகு ஏற்கெனவே பல்வேறு நாடுகளிலும் கள முனைகளிலும் எதிர்கொண்டிருந்தது.

முன்னைய சோவியத் ஆட்சியாளர்களை ஆப்கானிஸ்தானிலிருந்து விரட்டுவதற்காக பெரும் நிதியையும் ஆயுதத்தையும் வழங்கி அமெரிக்காவால் திரட்டப்பட்ட ஆப்கான் ஆயுததாரிகள், பின்னர் பணத்துடனும் ஆயுதங்களுடனும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்திருந்ததையும், அவர்கள் அமெரிக்காவுக்கும் அமெரிக்க ஆதரவு நாடுகளுக்கும் எதிராக திரும்பியதையும் மேற்குலகு மறந்துவிடமுடியாது. ஆப்கானிலும் பாகிஸ்தானிலும் இப்போது நாளாந்த நிகழ்வுகளாகியிருக்கும் தாக்குதல்கள் இவற்றின் பின்விளைவுகளே.

எனவேதான், லிபியாவில் தாராளமாக பெருமளவில் புழக்கத்தில் உள்ளதாக கருதப்படும் மோட்டார் ஷெல் மற்றும் எறிகணைகள் போன்ற ஆயுதங்கள், அந்த நாட்டின் அமைதிக்கு இடையூறானது என்றும், போருக்குப் பிந்திய ஆப்கான் - ஈராக் ஆகிய நாடுகளின் தற்போதைய அமைதியின்மைக்கும் இதுவே காரணமாக அமைந்தது என்றும் போர் மற்றும் தந்திரோபாய கற்கை நெறிகளில் நிபுணத்துவம் கொண்ட பிரித்தானிய ஆய்வாளர் பெஞ்சமின் பெரியும் எச்சரிக்கிறார்.

ஆட்சிக்கு எதிராக செயல்பட்டவர்கள் வீடுவீடாக, தெருத் தெருவாக, கிராமம் கிராமமாக தேடித் தண்டிக்கப்படுவார்கள் என்று, மறைந்திருந்து ஒலிக்கும் கடாபியின் எச்சரிக்கைக் குரலிலும் பொருள் பொதிந்திருக்கலாம் என்ற கூற்றும் மறுப்பதற்கில்லை. புதிய ஆட்சிக்கு கடாபி ஆதரவாளர்களால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான திறன் இடைக்கால அரசின் படைக்கு கிடையாதென்ற கவலை மேற்குலகத்துக்கு உண்டு. கடாபிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆயுதந்தாங்கிய பொதுமக்கள் அல்லது ஆயுதங்களை கையாள்வதில் ஓரளவே அநுபவம் கொண்டவர்கள்.

கூட்டுப்படை வழங்கிய நவீன ஆயுதங்களை கையாளும் அநுபவமும் இவர்களுக்கு கிடையாது. கேணல் கடாபியின் படையிலிருந்து விலகிச் சென்ற படையினரில் ஒரு பகுதியினரே கனரக தாங்கிகளையும் ஏவுகணைகளையும் இயக்கி, கடாபி படையினரை தோற்கடிக்க காரணமாயிருந்தனர்.

இந்த இரு தரப்பினரையும் ஒன்றிணைத்து போதிய பயிற்சிகளைவழங்கி, புதிய மரபுவழி இராணுவ கட்டமைப்பை விரைந்து அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இடைக்கால அரசுக்கு உண்டு. இடைக்கால அரசுக்கு கடாபி ஆதரவு படையினரால் அச்சுறுத்தல் தொடரும் நிலையில் இவ்வாறான பயிற்சிகளுக்கும் இராணுவ கட்டமைப்பு தயாரிப்புகளுக்கும் மாதங்கள் தேவையாகலாம்.


இன்னும், லிபிய இடைக்கால அரசுக்கு முழுமையான இராணுவ அல்லது பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பயிற்சிகளை எங்கு வழங்குவது; இதனை யார் வழங்குவது; வெளிநாட்டு படைகளின் பயிற்சி அவசியமா என்ற கேள்விகளுக்கும் இன்னமும் விடைகாணப்படவில்லை. ஆப்கானிலும் பொஸ்னியாவிலும் இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்ட நேட்டோ படையினர், லிபிய படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதில் புதிய பாணியை கடைப்பிடிக்கக்கூடும். பயங்கரவாதத்துக்கு அல்லது மேற்குலகுக்கு எதிரான கிளர்ச்சிகளை முறியடிக்கும் தற்கால தந்திரோபாயம் லிபியாவின் எதிர்கால பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குமா என்ற கேள்வி, காலம் தரப்போகும் பதிலுக்கு காத்திருக்கிறது.

தலைமறைவு வாழ்க்கைக்கு துரத்தப்பட்டிருக்கும் அரபு ஆபிரிக்க உலகின் நீண்டகால புரட்சித் தலைவர் கடாபியின் எதிர்கால பழிவாங்கல் திட்டங்கள் நடவடிக்கைகள் எதுவாக இருப்பினும் அவற்றை முறியடிக்கும் தயார்நிலையும் வல்லமையும் கொண்ட பாதுகாப்பு படை லிபியாவுக்கு மிகமிக அத்தியாவசியம்.

லிபியாவின் புதிய மக்கள் அரசினால் சுயமாக அதனை ஏற்படுத்திக் கொள்ள முடியாதவரையில், பாதுகாப்புக்கு மேற்குலகிடம் அது அடைக்கலமாகும் நிலை தவிர்க்கமுடியாததாகும். அதற்கு பிரதிபலனாக, அவர்களின் தாகம் தீர்க்கும் சொந்த எண்ணெய்த் தடாகங்களாக லிபியா மாறவும்கூடும்.

கடாபி செயலிழக்காத அல்லது கொல்லப்படாத நிலையில்; அவரது ஆதரவு படையினர் முற்றுமுழுதாக முறியடிக்கப்படாத சூழ்நிலை காணப்படும்வரையில், லிபியாவின் சுதந்திரமும் மக்களாட்சியும் நிரந்தரமானது என்று கூறுவதற்கில்லை.

கடாபியின் ஆட்சிக்கு முடிவுகட்ட காரணமாக அமைந்த லிபியாவின் எண்ணெய்வளமே தற்போது புதிதாக மலர்ந்துள்ள லிபிய மக்களாட்சியின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் என்பதே யதார்த்தம். ■



# கடாபி: ஆடிய ஆட்டம்

லிபியாவின் கரையோர துறைமுக நகரங்களில் ஒன்றான சேர்ற் என்னுமிடத்தில் 1942ஆம் ஆண்டு கூடாரமொன்றில் பிறந்த முமார் கடாபி, அந்த நகரத்தில் ஆரம்ப கல்வியைக் கற்றார்.

நகர வாழ்க்கையில் கொண்ட மோகத்தினால் பென்காசி சென்று, புவியியலில் உயர் கல்வி கற்க மாணவனாக பதிவு செய்துகொண்டார்.

சிறு வயதிலேயே அதி புத்திசாலித்தனமும் துடிப்பும் கொண்ட கடாபி, பட்டப்படிப்பை பாதியில் கைவிட்டு இராணுவத்தில் இணைந்தார். இராணுவத்தில் இருந்தபோது தத்துவக் கல்வியிலும் இஸ்லாமிய நெறிகளைக் கற்பதிலும் கூடுதல் கவனம் செலுத்தினார். அதீத மன எழுச்சிகொண்ட கடாபி, இத்ரிஸ் மன்னரின் ஆட்சியை 1969ஆம் ஆண்டு இரத்தம் சிந்தாத புரட்சி மூலம் கவிழ்த்தார். அறுபத்தாறு லட்சம் மக்கள்தொகையைக் கொண்டதும், பாரிய எண்ணெய் வளம் நிறைந்ததுமான லிபியாவிள் அதிகாரம்மிக்க தலைவராக தன்னை நிலைநிறுத்திக்கொண்ட கடாபி, தனக்கு எதிராக கிளர்ச்சிசெய்ய முற்பட்டவர்களை முறியடித்து, அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டார்.

கடாபியின் ஆட்சியை ஏற்க மறுத்து ஆர்ப்பாட்டம் மற்றும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்கள், அரசியல் ஆர்வலர்கள் பலர் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்கள். இன்னும் பலர் விசாரணைகளின்றி சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதனால், அதிருப்தியாளர்கள் பெரும் எண்ணிக்கையில் லிபியாவைவிடடு வெளியேறி பிற நாடுகளில் தஞ்சம் கோரும் நிலை ஏற்பட்டது.

எகிப்தின் முன்னாள் தலைவரான மறைந்த காமல் அப்துல் நாஸரின் அரபுலக தேசிய சோசலிச கொள்கைகளால் கவரப்பட்ட கடாபி லிபியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகள் இணைந்த, பலம்பொருந்திய கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்திருந்தன. துனிசியாவுடன் ஒன்றிணைந்து கூட்டமைப்பு அமைக்கும் கடாபியின் முயற்சியும் கைகூடவில்லை.

எனினும், இஸ்லாமை முன்னிலைப்படுத்திய நடவடிக்கைகள்; சிறந்த ஆளுமை மற்றும் கவர்ச்சிகரமான பேச்சு போன்றவற்றால் கடாபி அரபுலகத்தினதும் ஆபிரிக்க நாடுகளினதும் முன்னோடி தலைவராகவும் மாறிவந்தார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் குரல் கொடுத்த கடாபி, எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே 1978இல் அமெரிக்காவின் காம் டேவிட்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு எதிராக அரபு நாடுகளை அணி திரட்டுவதில் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

இஸ்ரேல் - பாலஸ்தீன நெருக்கடியில் அரபுலகின் சார்பில் தகுந்த தீர்வினை முன்வைக்க முடியாதிருந்த கடாபியின் பார்வை, ஆபிரிக்க நாடுகளின் வெளிநாட்டு கொள்கைகளின்மீது திரும்பியது. ஐக்கிய அமெரிக்கா போன்று ஆபிரிக்க நாடுகளையும் ஒன்றிணைத்து ஐக்கிய ஆபிரிக்க நாடுகள் என்னும் அமைப்பாக கொண்டுவரும் திட்டத்தோடு ஆபிரிக்க ஒன்றியத்தை ஏற்படுத்துவதில் கடாபி வெற்றிகண்டிருந்தார்.


அரபுலகிலும் ஆபிரிக்காவிலும் தனது செல்வாக்கை வளர்த்துக்கொண்டபோதிலும், மேற்குலகத்தினால் அவர் வெறுப்புக்குள்ளான ஒருவராகவே நோக்கப்பட்டார். பல்வேறு நாடுகளில் செயல்பட்டுவந்த புரட்சியாளர்களுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் நிதி மற்றும் ஆயுதங்கள் வழங்கும் பயங்கரவாதியாகவும் கடாபி நோக்கப்பட்டார். பிரித்தானியாவில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அயர்லாந்து விடுதலை இராணுவமான ஐ. ஆர். ஏ., கொலம்பியாவின் புரட்சிகர விடுதலை முன்னணி போன்றவற்றுக்கு ஆயுதம் வழங்கியதான குற்றச்சாட்டுகள் அவற்றுள் சில.

1986ஆம் ஆண்டு பேர்ளின் நகர இரவு விடுதியில் லிபிய அநுசரணையுடன் நடத்தப்பட்டதாக கூறப்பட்ட தாக்குதலில் இரண்டு அமெரிக்க படையினர் கொல்லப்பட்ட சம்பவம், அமெரிக்காவின் ஆத்திரம் லிபியாமீது திரும்புவதற்கு காரணமாயிற்று. இதற்கு பதிலடியாக திரிப்பொலியிலும் பென்காசியிலும் அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் கடாபியின் வளர்ப்பு மகள் உள்பட 35பேர் கொல்லப்பட்டார்கள்.

அனைத்துலகில் கடாபி அந்நியப்படுத்தப்பட்டு ஒதுக்கிவைக்கப்படுவதற்கு 1988இல் மேற்கொள்ளப்பட்ட லொக்கர்பி விமானக் குண்டுவெடிப்பு தாக்குதல் சம்பவம் காரணமானது. ஸ்கொட்லாந்தின் லொக்கர்பியில் 270 பயணிகள் உயிரிழந்த அமெரிக்காவின் 'பன் ஆம்' விமான தாக்குதலை திட்டமிட்டு நடத்தியதாக கடாபிமீது குற்றஞ்சாட்டப்பட்டது. நீண்ட காலமாக இந்த குற்றச்சாட்டை மறுத்துவந்ததன்மூலம் மேற்குலகால் ஒதுக்கிவைக்கப்பட்டு பல்வேறு தடைகளையும் எதிர்கொண்ட கடாபி, 2004இல் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடி டொலரை நட்ட ஈடாக வழங்க முன்வந்தார். லொக்கர்பி தாக்குதலுக்கு பொறுப்பேற்று நட்ட ஈடு வழங்கியமை; அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுத தயாரிப்பை நிறுத்த முன்வந்தமை போன்றவற்றால் மேற்குலகுடனான கடாபியின் உறவு மீண்டும் துளிர்விட்டது.

இதனால், 2009ஆம் ஆண்டு அமெரிக்கா செல்லவும் ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்தவும் கடாபிக்கு வாய்ப்பு கிட்டியது. மேற்குலகுடனான புதிய உறவுடன், வேறொரு பரிமாணத்தில் அரசியலைத் தொடர முற்பட்ட கடாபியின் ஆட்சிக்கு எகிப்து, துனிசியா போன்ற அயல்நாடுகளில் எழுந்த மக்கள் புரட்சி அபாயச் சங்கு ஊதியது. ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள கடாபி மேற்கொண்ட மூர்க்கத்னமான நடவடிக்கைகள் காரணமாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை உத்தரவும் அவருக்கு இப்போது காத்திருக்கிறது.

கடாபி இன்று ஆட்சியிழந்த தலைவர் மட்டுமல்ல, மனிதத்துக்கு எதிராக செயல்பட்டாரென அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தால் தேடப்படும் ஒரு குற்றவாளி.



22 கரட் அசல் தங்க, வைர நகைகள்
அழகு நிலா நகை மாடம்
Mohan Jewellery Mart
201, Rue du Saint-Denis
75010 Paris
Tel: 01 42 05 65 26
Fax: 01 42 05 65 79
Metro: La Chapell ou Gare du Nord
www.mohanjewellerymart.com
Email: mohanjm@hotmail.fr

# அரசியலில் அவதியுறும் பொருளாதார நெருக்கடி



**‘ஆம்; முடியும்’ என்ற அதிபர் ஒபாமாவின் நம்பிக்கையில் அமெரிக்க மக்களை மாற்றமுடியவில்லை**

**சாணக்கியன்**


அமெரிக்க பொருளாதாரத்தின் பிரச்னைபற்றிப் பேசும்போது ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புட்டினின் வர்ணனை நினைவுக்கு வருகிறது. “வட்டி அடிப்படையிலான ஒட்டுண்ணி சந்தைப் பொருளாதாரம்'' என்று அவர் சொன்னது, அமெரிக்காவின் தற்போதைய நெருக்கடியைக் கச்சிதமாக உணர்த்தக்கூடியது.

‘ஆம்; முடியும்’ என்னும் நன்னம்பிக்கை கோஷத்துடன் அதிபர் பதவியைப் பிடித்த பராக் ஒபாமா, பதவியேற்ற மூன்று ஆண்டுகளுக்குள்ளாக விழிபிதுங்கி நிற்கிறார். அமெரிக்காவின் களஞ்சியக் கடன் பத்திரங்களின் நம்பகத்தன்மையின் தரத்தை ‘ஏஏஏ’ என்னும் உயர் நிலையிலிருந்து ‘ஏஏ+’ எனும் தாழ் நிலைக்கு இறக்கி, உலக பொருளாதார அடிப்படையையே அதிர வைத்தது ‘ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் - எஸ் அன்ட் பி’) *(Standard & Poor's - S&P)* கடன் தரநிர்ணய நிறுவனம். இதன் விளைவாக, அமெரிக்காவில் மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் பங்குச் சந்தை வீழ்ச்சியைக் கண்டது. இன்னும் ஓராண்டில் தேர்தலைச் சந்திக்கவுள்ள அதிபர் ஒபாமா, அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் தன் பதவியையும் காப்பாற்றவேண்டிய கடும் நெருக்கடியில் இருக்கிறார்.

அமெரிக்காவின் கடன் பத்திரங்களின் நம்பகத்தன்மையின் தரத்தைக் கீழிறக்கிய ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் நிறுவனத்தின் செயல்பாடு குறித்துக் கேள்வி எழுப்பப்படுகிறது. இந்நிறுவனம் தனது கணக்கீட்டில், மானியச் செலவைச் சுமார் 2 ஆயிரம் கோடி டொலர்கள் கூடுதலாக்க் கணக்கிட்டிருந்ததை அமெரிக்க நிதி அமைச்சு அதிகாரிகள் கண்டுபிடித்தார்கள். நிறுவனம் இந்தத் தவறை ஒப்புக்கொண்டது. ஆனாலும், தனது தர நிர்ணயத்தை மாற்ற அது ஒப்புக்கொள்ளவில்லை. தர நிர்ணயத்துக்கான அடிப்படை இது மட்டுமல்ல என்று அது

**சந்தைப் பொருளாதாரமே சிறந்தது; மக்களைச் சேமிக்கவைப்பதைவிடவும் அவர்களைச் செலவழிக்கத் தூண்டுவதே சந்தைப் பொருளாதாரத்தின் ஜீவநாடி என்ற சித்தாந்தத்தை உருவாக்கியதும் அமெரிக்காதான். இப்போது, அதற்கான விலையை அது கொடுக்கிறது**


Standard & Poor's
A Division of The McGraw-Hill Companies





கூறுகிறது.

கணக்குப் பிசகு ஒருபுறம் இருக்க, அரசியல் ரீதியாகவும் எஸ் அன்ட் பி நிறுவனத்தின்மீது ஐயம் எழுகிறது. இந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் அமெரிக்க குடியரசுக் கட்சிக்குச் சார்பானவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஒபாமாவின் மானியங்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய கறுப்பு இன மக்களுக்கானது. இந்த மானியங்களை எதிர்க்கும் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களே இந்த மானியங்களின் அடிப்படையில், அமெரிக்காவின் கடன் மதிப்பைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இனம் சார்ந்த பாரபட்சம் என்பதை நிரூபிக்க முடியாவிட்டாலும், குடியரசுக் கட்சியின் கை இந்த முடிவுக்குப் பின்னால் இருக்கிறது என்பதற்கான ஐயங்கள் வலுவாகவே உள்ளன. இந்நிலையில், ஒபாமாவும் அமெரிக்காவும் சந்திக்கும் இந்த நெருக்கடி பெருமளவில் அரசியல் நெருக்கடியாகவே உள்ளது என்று சொல்லலாம்.

ஆனால், அமெரிக்காவின் பொருளாதார நிலை கவலைதரும் நிலையில் உள்ளது என்பதை மறுக்கமுடியாது. வெளிப் பார்வைக்குப் பணக்கார நாடாகத் தோற்றம் தரும் அமெரிக்கா, உண்மையில் மாபெரும் கடன் சுமையில் சிக்கியிருக்கிறது என்பதே உண்மை. அதன் வல்லரசு மார்தட்டல்கள்; உலகை வழி நடத்த முனையும் நாட்டாண்மைத்தனம் ஆகியவற்றின் அடிப்படையில் அமெரிக்காவின் இராணுவ பலம் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் பொருளாதார பலம் உள்ளதா என்றால் அது தான் இல்லை. அதன் நடப்பு ஆண்டின் பட்ஜெட் 3.83 டிரில்லியன் டொலர்கள். அமெரிக்காவின் கடனோ 13.8 டிரில்லியன் டொலர்களைத் தாண்டிவிட்டது.

அமெரிக்கா மட்டுமன்றி, ஐரோப்பாவின் பெரும் பொருளாதாரத்தைக் கொண்ட ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகள் தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாமல் தத்தளிக்கின்றன. சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் எக்கச்சக்கமாகக் கடன் வாங்கிய இந்த நாடுகள் இன்று கடன் சுமையில் சிக்கித் திணறுகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சி அந்த நாட்டுடன் மட்டும் முடிந்துவிடாது. அமெரிக்கா 'ஏஏஏ' தகுதியை இழந்த ஓரிரு நாள்களில், பிரான்சும் அந்தத் தகுதியை இழக்க நேர்ந்தது. சந்தைப் பொருளாதாரத்தின் விளைவு இது.

இப்போது, அமெரிக்காவின் கடன் அமெரிக்காவின் மொத்த உற்பத்தியில் 95 சதவீதமாகும். இதனால், இந்தக் கடன் அளவை உயர்த்தி நிர்ணயிக்க வேண்டிய நிலைக்கு பராக் ஒபாமா அரசு தள்ளப்பட்டது. ஆனால், எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் பிரதிநிதிகள் சபை உள்ளது. அங்கு ஒபாமாவின் ஜனநாயக கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை. இது தொடர்பான தீர்மானத்தை ஆதரிக்கவேண்டுமானால், அரசு தனது பொருளாதார ஊக்குவிப்பு செலவுகளைக் குறைக்கவேண்டுமென குடியரசுக் கட்சியினர் நிபந்தனை விதிக்க, அதை ஏற்றால், பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால், ஒபாமா அதை ஏற்க மறுக்க, அமெரிக்கா இன்னொரு மாபெரும் நிதிச் சிக்கலை நோக்கி சென்றது.

கடன் அளவை உயர்த்தாவிட்டால், எந்த அமைப்பிடமிருந்தும் அமெரிக்காவால் நிதி திரட்டமுடியாது. அந்த நிலை ஏற்பட்டால், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கமுடியாது; ஓய்வூதியம் வழங்கமுடியாது; சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி இருக்க மாட்டாது; இராணுவ ஒப்பந்தகாரர்களுக்கு பணம் கொடுக்கமுடியாது; அரசு மருத்துவமனைகளுக்கு மருந்து கூட வாங்கமுடியாது என்ற நிலை உருவானது. அமெரிக்க நிறுவனங்களின் பங்குகளில் முதலீடுகள்கூட வாபஸ் ஆகி, முழுப் பொருளாதாரமும் மூழ்கும் நிலை உருவானது.

ஒருவழியாக, அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாக குடியரசுக் கட்சி அறிவித்ததையடுத்து அமெரிக்கா நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

அமெரிக்காவின் கடன் அதிகமானதற்கு முக்கிய காரணம், போர்கள். ஜோர்ஜ் புஷ் காலத்தில் ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களுக்காக செலவிடப்பட்ட தொகை 6.1 டிரில்லியன் டொலர். பராக் ஒபாமா இதுவரை போர்ச் செலவுக்காக ஒதுக்கிய தொகை 2.4 டிரில்லியன் டொலர்.

இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க அமெரிக்காவுக்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று; வரிகளை உயர்த்தி, வருவாயைப் பெருக்குவது. மற்றொன்று; மக்களுக்கான செலவுகளைக் குறைப்பது. முதல் வழி, பெரு நிறுவனங்களையும் செல்வந்தர்களையும் பாதிக்கும். இரண்டாவது வழி, சாமானிய மக்களைப் பாதிக்கும். முதல்

**ஒபாமாவின் மானியங்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய கறுப்பு இன மக்களுக்கானது. இந்த மானியங்களை எதிர்க்கும் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களே இந்த மானியங்களின் அடிப்படையில், அமெரிக்காவின் கடன் மதிப்பைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது**

அமெரிக்காவுக்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று; வரிகளை உயர்த்தி, வருவாயைப் பெருக்குவது. மற்றொன்று; மக்களுக்கான செலவுகளைக் குறைப்பது. முதல் வழி, பெரு நிறுவனங்களையும் செல்வந்தர்களையும் பாதிக்கும். இரண்டாவது வழி, சாமானிய மக்களைப் பாதிக்கும். முதல் வழியைத் தேர்ந்தெடுப்பதே தொலை நோக்கில் நல்லது. ஆனால், ஒபாமாவால் அதைச் செய்யமுடியவில்லை. அவரால் மட்டும் அல்ல; எந்த அமெரிக்க அதிபராலும் அந்த முடிவை எடுக்கமுடியாது

வழியைத் தேர்ந்தெடுப்பதே தொலை நோக்கில் நல்லது. ஆனால், ஒபாமா வால் அதைச் செய்யமுடியவில்லை. அவரால் மட்டும் அல்ல; எந்த அமெ ரிக்க அதிபராலும் அந்த முடிவை எடுக்க முடியாது. காரணம், அமெரிக்க அரசியலைப் பின்னிருந்து இயக்கு வதே சந்தைப் பொருளாதாரம்தான்.

அமெரிக்காவுக்கு அதிக அளவில் கடன் கொடுத்திருக்கும் நாடுகளில் முத லிடத்தில் இருக்கிறது சீனா. மேலும், சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத் தியில் 40 சதவிகிதம் ஏற்றுமதியை நம் பியே இருக்கிறது. இந்த ஏற்றுமதி அமெரிக்காவின் சந்தையை நம்பி இருக்கிறது. ஏற்றுமதியை நம்பியிருக் கும் நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளையே பெரிதும் சார்ந்திருக்கும். இந்த நாடுகளின் நிலை இப்போது வலுவாக இல்லை. ஐரோப் பிய நாடுகளின் இன்றைய நிலைக்குச் சிறந்த உதாரணம் கிரேக்கம். கிரேக்கத் தின் கடன் தொகை 25 லட்சம் கோடி. அந்த நாட்டின் ஒட்டுமொத்த உள் நாட்டு உற்பத்தியைப்போல இது ஒன் றரை மடங்கு. கிரேக்கப் பொருளாதா ரம் வீழ்ந்தால், அதையடுத்து ஸ்பெயி னும் போர்த்துக்கலும் பொருளாதரத் தில் வீழ்ச்சியுறும். தொடர்ந்து, அத் தனை ஐரோப்பிய நாடுகளும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கும். யூரோ அதன் மதிப்பை இழக்கும். இவற் றைத் தவிர்ப்பதற்காகவே ஐரோப்பிய நாடுகள் கடன்மேல் கடன் கொடுத்து கிரேக்கத்தைக் காப்பாற்றிக்கொண்டி ருக்கின்றன. ஜப்பானோ சுனாமியின் தாக்கத்திலிருந்து இன்னமும் மீள வில்லை.

அமெரிக்க பத்திரங்களில் சீனா பெருமளவு (ஒரு லட்சம் கோடி டொலருக்கு மேல்) முதலீடு செய்துள் ளது. சமூக நலத் திட்டங்களுக்கான நிதியையும் இராணுவ திட்டங்களுக் கான நிதியையும் குறைப்பதே அமெ ரிக்காவுக்கு நல்லது என்று அறிவுரை கள் வழங்கப்படுகின்றன.

இந்த நெருக்கடியிலிருந்து மீள, கிடப்பில் கிடக்கும் பல்வேறு சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் பெறும் முயற்சியில் ஒபாமா இறங்கியி ருக்கிறார். இந்த ஒப்பந்தங்கள் பெரும் பாலும் வளரும் நாடுகளுடனான ஒப் பந்தங்கள். இவை பெரும்பாலும் அமெரிக்காவுக்குச் சாதகமானவை.

இப்போது அமெரிக்காவின் கடன் அளவை உயர்த்துவது என்ற முடிவு, நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அவசர சிகிச்சைதானே தவிர, அமெரிக் காவின் நோய்க்கு மருந்து அல்ல. மருந்து என்ன என்பது தெரியவேண்டு மானால் நோய் என்ன என்பதைத் தெளி வாக அறியவேண்டும். அமெரிக்கா வின் பொருளாதாரக் கொள்கையில் இதற்கான விடை இருக்கிறது.

மாற்றம் என்ற முழக்கத்துடன் ஆட் சியைப் பிடித்த பாரக் ஒபாமா, மாற்றத் துக்கான பாதையில் நடைபோடாமல் கடன், இராணுவச் செலவு, அமெரிக் காவுக்குச் சாதகமான ஒப்பந்தங்கள் என்று பழைய பாதையிலேயே போவ துதான் பெரிதும் ஏமாற்றம் அளிக்கி றது. ஆனால், இதில் அவரையும் முழு மையாகக் குறைசொல்லிவிட முடி யாது. அமெரிக்க மக்களின் மனப்பாங் கின் அடிப்படையில் இதற்கானகார ணமும் தீர்வும் இருக்கின்றன.

சந்தைப் பொருளாதாரமே சிறந் தது; மக்களைச் சேமிக்கவைப்பதைவி டவும் அவர்களைச் செலவழிக்கத் தூண்டுவதே சந்தைப் பொருளாதாரத் தின் ஜீவநாடி என்கிற சித்தாந்தத்தை உருவாக்கியதும் அமெரிக்கர்கள்தான். இப்போது, அதற்கான விலையை அவர்கள் கொடுக்கிறார்கள்.

அமெரிக்காவின் மிதமிஞ்சிய நுகர்வு கலாசாரம்தான் இதற்குக் கார ணம் என்று சொல்லலாம். தங்களது வசதிகளுக்கும் சொகுசு வாழ்க்கைக் கும் எந்த இடையூறும் வருவதை அமெ ரிக்கர்கள் விரும்புவதில்லை. கடந்த நூறாண்டுகளில் அமெரிக்காவை ஆட் சிபுரிந்தவர்கள் அனைவரும் அமெரிக் கர்களின் வாழ்க்கையை எல்லா வகையி லும் எளிதாக மாற்றி அவர்களைத் திருப்திப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சமூகமே உழைப்பைப் பற்றியோ, கட னைப் பற்றியோ கவலைப்படாமல் வாழ்ந்துவருகிறது. 'உலகம் பிறந்தது எனக்காக' என்னும் போக்குதான் இதற் கெல்லாம் காரணம். வாங்கிய கடன் கள் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பதில், சுக வாழ்வைப் பெருக்குவதற்கே அதிகம் செலவிடப்பட்டன.

உலகில் வேறெங்கும் இல்லாத 'வாரத்துக்கு நாலு நாள் வேலை' அறி முகப்படுட்தப்பட்ட ஒரே நாடு அமெ ரிக்கா. மோசமான உணவுப் பழக்கங்க ளாலும் சொகுசு வாழ்க்கையாலும் அமெரிக்கர்கள் பலர் அதிக எடை, இதயநோய், நீரிழிவு' என அவதிப்படு கிறார்கள். இத்தகைய வாழ்க்கை முறை யின் விளைவாக அமெரிக்காவின் மொத்த உற்பத்தி பாதிக்கப்பட்டு, அமெரிக்கப் பொருளாதாரத்தையே அது பாதித்துவிட்டது.

அமெரிக்காவின் இராணுவ வல்

லமை, இயற்கை வளங்கள், பல நாடுகளிலிருந்து அது இறக்குமதி செய்யும் பொருள்கள், ஐ.நா., உலக வங்கி முதலான அமைப்புகளில் தனக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, பிற நாடுகள் தன் பேச்சைக் கேட்கச் செய்தமை ஆகிய அனைத்தும் சேர்ந்து அமெரிக்காவை உலகின் தலைவனாகக் காட்டின. ஆனால், அந்தத் தோற்றம் சீக்கிரமே வெளுத்துவிட்டது. வேடம் கலைந்துவிட்டது. அமெரிக்கா கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் நாடு; வேலை வாய்ப்பின்மையால் அவதியுறும் இளைஞர்களை அதிகமாகக் கொண்ட நாடு; சர்வதேச அளவில் கடன் தர நிர்ணயத்தில் சறுக்கும் நாடு என்ற உண்மைகள் அம்பலமாகின்றன. உலகின் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொண்ட அமெரிக்கா, இன்று சீனா போன்ற நாடுகளிலிருந்து கறாரான சொற்களை எதிர்நோக்குகிறது. நிதி அமைப்புகள் அதன் கௌரவத்தைக் குலைக்கின்றன. அமெரிக்காவின் மொத்த உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மிகப் பெரிய நெருக்கடிகளுள் ஒன்றாகவே இதை நோக்கவேண்டும்.

அமெரிக்காவைக் கடுமையாக விமர்சித்துவரும் நோம் சாம்ஸ்கியிடம் சமீபத்தில் ஒரு பத்திரிகையாளர், "நீங்கள் அதிபராக இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். "அமெரிக்க மக்களின் மனநிலை மாறாதவரையிலும் நானும் பிற அதிபர்கள் போலத்தான் செயல்படமுடியும்'' என்று சொம்ஸ்கி பதில் சொன்னார். இதுதான் அமெரிக்காவின் உண்மையான பிரச்னை.

'மாற்றத்தை விதைப்பேன்' என்னும் நம்பிக்கையை ஏற்படுத்திய ஒபாமாவால் அமெரிக்க மக்களின் அணுகுமுறையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. தொலை நோக்குத் திட்டங்கள் மூலமும் தொடர்ச்சியான பல நடவடிக்கைகள் மூலமும் இது சாத்தியப்படலாம். ஆனால், அதற்குள் அடுத்த தேர்தல் வந்துவிடும். தேர்தலுக்கான கோஷங்களும் குறுகிய காலத் திட்டங்களும் முன்னிலைக்கு வரும். தொலைநோக்குத் திட்டங்களும் மாற்றத்துக்கான முயற்சிகளும் பின்னுக்குப் போய்விடும். இவ்வாறான ஒரு சிக்கலில் அமெரிக்கா மாட்டிக்கொண்டிருக்கிறது. சமூக அளவில் ஏதேனும் இயக்கங்கள் தோன்றி, அமெரிக்க மக்களின் அணுகுமுறையை மாற்றாத வரையில் அரசியலால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது. ■

# இந்தியாவின் ஸ்திர நிலை



அமெரிக்காவின் வீழ்ச்சியால் பெரிதும் பாதிக்கப்படப்போவது, அமெரிக்காவுக்கு பெருமளவில் பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்யும் நாடுகளும், அமெரிக்கக் கடன் பத்திரங்கள் மற்றும் டொலர்களைத் தமது அந்நியச் செலாவணி இருப்பாக வைத்திருக்கும் நாடுகளும் தான். இந்த இரு விஷயங்களிலும் சீனாவும், இந்தியாவும் முன்னணியில் இருந்தாலும், இந்தியாவுக்கு இதனால் வரும் பாதிப்பு சிறிது குறைவாக இருக்கவே வாய்ப்பு அதிகம் எனக் கருதப்படுகிறது.

இதற்குக் காரணம், இந்தியாவின் பாரம்பரிய குணமான, நஷ்டங்களைத் தவிர்க்க அல்லது குறைக்க முயலும் போக்குதான். இந்தப் போக்கு, அமெரிக்காவைப் பெரிதும் சார்ந்துவிடாமல், இந்தியாவைக் காப்பாற்றியிருக்கிறது. உலகமயமான நிலையிலும் சீனாவைப்போன்று இந்தியா அமெரிக்க பொருளாதாரத்துடன் ஆழமான உறவைக் கொண்டிருக்கவில்லை.

இந்தியா தனது அந்நியச் செலாவணி இருப்பை பிற நாடுகளில் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியின் விளைவுகளிலிருந்து பாதுகாக்க பல்வேறு வழிமுறைகளை கையாண்டுவருகிறது. அந்நியச் செலாவணி இருப்பில் தங்கத்தின் அளவைக் கூட்டுதல், டொலர் தவிர யூரோ, யென் போன்ற பிற நாட்டுச் செலாவணிகளையும் தேவையான அளவுக்கு வைத்திருத்தல் போன்றவற்றின் மூலம் தன் அந்நியச் செலாவணியின் மதிப்பை இந்தியா பாதுகாத்துக்கொள்கிறது.

ஜூலை 29 நிலவரப்படி, இந்திய அந்நியச் செலாவணி இருப்பு 319 ஆயிரம் கோடி டொலர்கள் என்று இந்திய ரிசர்வ் வங்கி கூறுகிறது.

என்றாலும், அமெரிக்க பொருளாதார வீழ்ச்சியால் பங்குச் சந்தை, வேலை வாய்ப்பு, சேவைத் துறைகள், அரசியல், இராஜதந்திரம் முதலான அம்சங்களில் ஏற்படும் பாதிப்புகளை இந்தியாவால் முற்றிலுமாக தவிர்த்துவிட முடியாது. குறிப்பாக, இந்தியாவின் 'தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் அடிப்படையிலான சேவைத்துறை' பெரிய அளவில் சவாலை எதிர்நோக்கும்.

இதன் தாக்கம் கட்டுமானத்துறை, உற்பத்தித்துறை என அனைத்து துறைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்து, நாட்டின் மொத்த வளர்ச்சி வீதத்தை பாதிக்கலாம். ஆனால், அடிப்படையில் இந்தியா மக்கள் தொகைப் பெருக்கமுள்ள நாடு என்ற அடிப்படையில், உள்நாட்டுத் தேவைகளின் மூலமாகவே தனது சந்தையின் வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொண்டு, பிற நாடுகளை எதிர்பாராமலேயே ஒருவாறாகச் சமாளித்துவிட முடியும்.

தொழில், விவசாயம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் இந்தியா பெற்றுள்ள தன்னிறைவும் இந்தியாவுக்குச் சாதகமாக அமையும். இதனால், புதிய வெளிநாட்டு முதலீடுகளும் ஈர்க்கப்படலாம்.

சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!

Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service

## Debt Problems?

call us for **confidential** and **expert** advice



## Free Consultation

to solve your financial problems

# Mortgage 4US

**Independent Financial Advisers**

**Karthigesu Sivanesan** MBA BSc Eng FPC
Independent Financial Adviser
**Mobile:** 07775 578 552

**Tim Drakes** MSci CEFA CEMAP
Independent Financial Adviser
**Mobile:** 07515 891 295

**020 7386 0924**
**www.mortgage4usltd.com**
6 Barton Road, London W14 9HD

FSA

Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.




இந்தியா

# ஒகஸ்ட் புரட்சி

**அன்னா ஹஸாரேயின் போராட்டம் அரசுக்கு எதிரான மக்களின் குமுறல்களுக்கு வடிகாலமைத்திருக்கிறது. போராட்ட அணுகுமுறைகள், அதன் கருத்தியல்கள் தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்தாலும், இந்திய குடிமைச் சமூகத்தில் இந்த போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள் முக்கியமானவை**

அரவிந்தன்



**பல உண்மைகளை உணர்த்தியிருப்பதுடன், பல கேள்விகளையும் இப் போராட்டம் எழுப்பியிருக்கிறது**

இந்திய சுதந்திர தினத்துக்கு மறுநாள் தொடங்கிய அன்னா ஹஸாரேயின் உண்ணா விரத போராட்டம் ஒகஸ்ட் 28 காலையில் முடிவுக்கு வந்தது. "பன்னிரண்டு நாள்களாக நடைபெற்ற போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது. இளைஞர்கள் சக்தியே இப்போராட்டத்தை முக்கியமானதாக மாற்றியது. மக்கள் சக்தி நாடாளுமன்றத்தைவிட பலமானது" என்றார் அன்னா ஹஸாரே.

பன்னிரண்டு நாள்களில் நடைபெற்ற நிகழ்வுகளை கவனித்தவர்களுக்கு அன்னா சொல்வதுபோல மக்கள் சக்தி, நாடாளுமன்றத்தைவிட வலிமையானது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கக்கூடும். இன்னொரு சுதந்திரப் போர் என்றும், ஒகஸ்ட் புரட்சி என்றும் வர்ணிக்கப்பட்ட இந்தப் போராட்டம், ஒரு தனிமனிதர் அல்லது ஒரு குழுவின் உறுதியான செயல்களால் எந்த அளவுக்கு மக்களின் ஆதரவைத் திரட்டமுடியும் என்பதை உணர்த்தியது. பல உண்மைகளை உணர்த்தியிருப்பதுடன் பல கேள்விகளையும் இப் போராட்டம் எழுப்பியிருக்கிறது.

முதலில், அன்னாவின் உண்ணாவிரதத்துக்கு அநுமதி மறுத்து அவரைக் கைது செய்த அரசு, பின்னர் படிப்படியாக தன் நிபந்தனைகளைத் தளர்த்தியது. அன்னாவுக்கு நாடு முழுவதுமிருந்து கிடைத்த ஆதரவு; காட்சி ஊடகங்களின் திரைகளையும் அச்சு ஊடகங்களின் பரப்பையும் அன்னாவின் போராட்டம் ஆக்கிரமித்துக்கொண்ட விதம்; முதலில் தயங்கினாலும் பின்னர் சுதாரித்துக்கொண்டு ஆதரவு தந்த எதிர்க்கட்சிகள்; நாடாளுமன்றத்தில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி உள்பட பலரும் அன்னாவைப் பாராட்டிப் பேசியது ஆகியவற்றைப் பார்த்தால், நாடாளுமன்றம் மக்கள் சக்திக்கு முன்பு தலைவணங்கியதாகவே தோன்றும். ஆனால், சற்றுக் கூர்ந்து கவனித்தால் அரசும் நாடாளுமன்றமும் இந்தப் பிரச்னையை எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு விரைவாகவும் சுமுகமாகவும் தீர்த்துவைக்க வேண்டும் என்று கருதியதாகவே தோன்றுகிறது. அன்னா முன்வைத்த கோரிக்கைகளில் பலவற்றையும் அரசு ஏற்கவில்லை. அவரது குழுவினர் முன்வைத்த 'ஜன் லோக்பால்' மசோதாவின் பெரும்பாலான அம்சங்களையும் இன்னமும் ஏற்கவில்லை. பிரதமர், நீதிபதி ஆகியோரும் 'லோக்பால்' வரம்புக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்கிற அதி முக்கியமான கோரிக்கைக்கு எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி ஆதரவு தெரிவித்தாலும் ஆளும் காங்கிரஸ் ஆதரவு தெரிவிக்கவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று கோரிக்கைகள் முக்கியமானவைதான் என்றாலும், பிரதமரையும் விசாரணை வரம்புக்குள் கொண்டுவரவேண்டும் எனும் ஜன் லோக்பாலின் தலையாய கோரிக்கை ஏற்கப்படாமலேயே இருக்கிறது.

நாடாளுமன்றமும் காங்கிரஸும் அன்னாவின் போராட்டத்துக்குப் பின்னால் உள்ள நியாயத்தை அங்கீகரித்ததுபோலவே தோற்றினாலும் இதற்குப் பின்னால் வேறொரு நோக்கமும் ஒளிந்திருக்கலாம். அன்னா குழுவினரின் உறுதியாலும் செய்தி ஊடக ஆதரவினாலும் இந்தப் போராட்டத்துக்கு எதிரான மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் பெரிதாகிவந்தது. அரசு இதைக் கையாண்ட முறை போராட்டத்துக்கு வலு சேர்ப்பதாகவே அமைந்தது. போராட்டத்துக்கு எதிரான வாதங்கள் அறிவுஜீவிகளின் வட்டத்தைத் தாண்டி எதிரொலிக்கவில்லை. இந்நிலையில், அன்னா குழுவும் பெருந்திரளான மக்களும் ஊழலை ஒழிக்க விரும்புவதாகவும் அரசும் நாடாளுமன்றமும் ஊழலை முக்கியமான பிரச்னையாகக் கருதவில்லை என்பதாகவும் ஒரு தோற்றம் உருப்பெற்று, வலுப்பெறத் தொடங்கியது. ஊழல் என்னும் ஒற்றைப் பிரச்னைக்கு எதிரான மக்களின் உணர்வுகள், அரசையும் ஆளுங்

கட்சியையும் சிறுமைப்படுத்தும் அளவுக்கு வளரக்கூடிய நிலை உருவானது. இதை வளரவிடுவது தனக்கு நல்லதல்ல என்று உணர்ந்த அரசு பின்வாங்குவது போன்ற பாவனையைக் கைக்கொண்டு, போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது என்றும் கருத இடம் இருக்கிறது. இப்போதைக்கு அன்னா குழுவினருக்கு வெற்றி என்று தோன்றினாலும், அரசு, குடிமைச் சமூகத்தின்மீதான தன் பிடியைத் தளரவிடாமலிருப்பதற்கான தொலை நோக்கு நடவடிக்கையாகவும் இதைப் பார்க்க முடியும். அன்னா குழுவினர் மீண்டும் தங்கள் போராட்டத்தைத் தொடங்கு முன் அரசு சுதாகரித்துக்கொண்டு தன் நிலையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.


என்றாலும், அன்னாவின் போராட்டம் சில முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. எதைப்பற்றியும் கவலைப்படாமல் தானுண்டு தன் வசதிகள் உண்டு என்று வாழ்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தை அது தெருவுக்குவந்து போராடவைத்திருக்கிறது. இந்தப் போராட்டமே நடுத்தர வர்க்கத்தின் போராட்டம் என்று சில விமர்சகர்கள் சொல்கிறார்கள். அது பெருமளவில் உண்மைதான். ஆனால், அதனாலேயே இந்தப் போராட்டத்தைச் சிறுமைப்படுத்தும் முயற்சி ஏற்கத்தக்கதல்ல. நடுத்தர வர்க்கம் பொது விவகாரங்கள் குறித்து அக்கறை செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டையும் இதே அறிவு ஜீவிகள் முன்வைத்துவருவதை மறந்துவிடமுடியாது. இது முழுக்கமுழுக்க நடுத்தர வர்க்கத்தினரின் போராட்டம் என்று சொல்வது தவறு என்பது, போராட்டம் நடக்கும் இடத்துக்கு நேரில் சென்று பார்திருந்தால் புரியும். கடைநிலைத் தொழிலாளிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் முதலானோரும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அவர்களையும் பெரும் எண்ணிக்கையில் போராட்ட மையங்களில் பார்க்கமுடிந்தது. குடும்ப அட்டை, பாஸ்போர்ட், வெள்ள நிவாரணத் தொகை, ஓட்டுநர் உரிமம் பெறுதல், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுதல் என்று எல்லா விவகாரங்களிலும் லஞ்சம் செலுத்தவேண்டிய நெருக்கடிக்கு மக்கள் உள்ளாகிறார்கள். நடுத்தர வர்க்கமும் மேல்தட்டு வர்க்கமும் நிர்வாகத்தைத் திட்டினாலும், கேட்கும் லஞ்சத்தை அவர்களால் வீசி எறிந்துவிட்டுப் போகமுடியும். அப்படிச் செய்யமுடியாத அடித்தட்டு மக்களுக்கு ஊழலின்மீதான கோபம் அதிகமாகவே இருக்கும். அதை வெளிப்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் கட்டாயம் தங்கள் குரலை ஒலிக்கச் செய்வார்கள். இந்தப் போராட்டத்திலும் அதைக் காணமுடிகிறது.

அரசின் மக்கள் விரோதச் சட்டங்கள் அடித்தட்டு மக்களை அதிகம் பாதிக்கிறது என்பதைக் குறிப்பிடும் எழுத்தாளர் அருந்ததி ராய், இது போன்ற சமயங்களில் லஞ்சம்தான் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் அம்சமாக இருக்கிறது என்கிறார். ஊழலை ஒழிப்பேன் என்று சொல்லும் மேட்டுக்குடியினர் இந்த மக்களின் நிலைபற்றிக் கவலைப்படுகிறார்களா என்று கேட்கிறார். மக்கள் விரோதச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக, லஞ்சம் மூலம் அதிலிருந்து தப்பிக்கும் உரிமைக்காகப் போராடுவது எப்படிச் சரியாகும்? அரசின் அணுகுமுறைகளிலும் செயல்முறைகளிலும் ஒட்டுமொத்த சீர்திருத்தம் ஏற்படுவதுவரையிலும் ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் அடித்தட்டு மக்களுக்கும் எதிரானதாகவே இருக்கும் என்று வாதிடுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், எல்லா விதமான போராட்டங்களிலும் இது போன்ற மறுபக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவைபற்றிக் கவலைப்படுவதும் அந்தப் பாதிப்புகளைக் குறைக்க முனைவதும் அவசியம்தான். ஆனால், அவற்றின் அடிப்படையில் போராட்டத்தையே தவறு என்று சொல்வதை ஏற்கமுடியாது. இது முழுக்க முழுக்க நடுத்தர வர்க்கத்தின் போராட்டம் என்றாலும் அதற்காக இந்தப் போராட்டத்தைக் குறைகூற முடியாது.

அருந்ததி ராய் மட்டுமன்றி அருணா ராய் என்னும் சமூக நல ஊழியரும் அன்னாவின் போராடத்தை விமர்சிக்கிறார். இவர், இந்திய ஆட்சிப் பணிப் பதவியைத் துறந்து மக்கள் பணிக்கு வந்தவர். ஊழல் ஒழிப்புக்கு மிகப் பெரிய ஆயுதமாகவுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டுவர முதன்மைக் காரணமாக இருந்தவர். நூறுநாள் வேலை சட்டம் வருவதற்கும் இவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. தன் பணிகளுக்காக மாக்ஸஸே விருதுபெற்ற அருணா ராய், லோக்பால் எனும் கருத்தை முதலில் முன்னெடுத்தவர். அன்னா ஹஸாரேயின் லோக்பால், ஜனநாயகத்துக்குக் கேடு செய்யும் என்கிறார் அருணா ராய். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகளைக்கொண்ட அமைப்பிடம் உச்சபட்ச அதிகாரத்தை அளிப்பது மிகப்பெரிய கேடாகவே முடியும். அதிகாரம்தான் ஊழலை உண்டாக்குகிறது. உச்சபட்சமான அதிகாரம் என்பது உச்சபட்சமான ஊழலையே உருவாக்கும் என்று அவர் முன்வைக்கும் விமர்சனங்கள் கூர்ந்து கவனிக்கவும் பரிசீலிக்கப்படவும் வேண்டியவை.

அன்னா ஹஸாரேயும் அவரது குழுவினரும் முன்வைத்த சில அதீதமான கோரிக்கைகளையும் அருணா ராய் விமர்சிக்கிறார். நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல் ஜன் லோக்பால் சட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றும் நாடாளுமன்றம் திருத்த முற்பட்டால் அன்னாவிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்றும் பேசுவது ஜனநாயகத்தை அவமானப்படுத்தும் செயல் என்று குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட தேதிக்குள் பிரதமர் பதில் சொல்லியாகவேண்டும் என்று சொல்வது; பிரதமர் அல்லது ராகுல் காந்தியுடன் தான் பேசுவேன் என்று அறிவிப்பது; அரசுக்குக் கெடுவைப்பது என்று சகட்டு மேனிக்கு அரசை விரட்டும் போக்கில் அன்னா குழுவினர் ஈடுபட்டார்கள். ஊழலை ஒழிக்க விரிவானதும் கடுமையானதுமான ஒரு சட்டம் தேவை. அந்தச் சட்டத்திலிருந்து யாருக்கும் விலக்கு அளிக்கவேண்டியதில்லை என்னும் அடிப்படைகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதற்குப் பதில், அன்னா குழுவினர் தாங்கள் இணையான ஓர் அரசு நடத்துவதுபோலப் பேசத் தொடங்கினார்கள். கடைசியில், பிரதமரையும் சட்ட வரம்புக்குள் கொண்டுவருவது முதலான முக்கியமான அம்சங்களில் கருத்தொற்றுமை ஏற்படாமலேயே போராட்டம் முடித்துக்கொள்ளப்பட்டது. சவடால்களில் கவனம் சிதறும்போது அடிப்படைகளில் சமரசம் செய்துகொள்வதே அதன் விளைவாக இருக்கும்.

செய்தி ஊடகங்களின் உதவி இல்லாமல் அன்னா ஹஸாரேயின் போராட்டத் துக்கு இந்த அளவு ஆதரவு திரண்டிருக்காது என்பதில் சந்தேகமில்லை. அன்னாவின் போராட்டத்தைத் தங்களது சொந்தப் போராட்டமாக எடுத்துக்கொண்டுவிட்ட ஊடகங்கள், அரசுக்கு எதிரான ஏனைய பல போராட்டங்களை அதிகம் கண்டுகொள்வதில்லை. அருந்ததி ராய் குறிப்பிடுவதைப்போல, தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் அணு உலைக்கு எதிராகப் பத்தாயிரம்பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதுகுறித்து எந்த ஊட



(படம்: நன்றி - 'ரைம்')

> 'நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல் 'ஜன் லோக்பால்' சட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றும் நாடளுமன்றம் அதைத் திருத்த முற்பட்டால் அன்னா ஹஸாரேயிடம் முன்அனுமதி பெறவேண்டும் என்றும் பேசுவது ஜனநாயகத்தை அவமானப்படுத்தும் செயல்'

கமும் அலட்டிக்கொள்ளவில்லை. மணிப்பூரில் பல அராஜகங்களுக்குக் காரணமான ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்தை எதிர்த்து இரோம் ஷர்மிளா பத்து ஆண்டுகளாக உண்ணாமல் போராடிக்கொண்டிருக்கிறார். ஒரிஸாவின் வனங்களைக் காக்க பாஸ்கோ ஆலையை எதிர்த்து பழங்குடி இன மக்கள் போராடுகிறார்கள். கங்கையைப் பாதுகாக்க இரண்டு மாதங்களுக்கும்மேல் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார் நிகமானந். இவற்றைப்பற்றியெல்லாம் ஊடகங்கள் அதிகம் பேசுவதில்லை. நேரடி ஒளிபரப்புகளை ஏற்பாடுசெய்து, போராட்டத்தைப் பெரும் நிகழ்வாக மாற்றுவதில்லை. அருந்ததி ராயும் ஏனைய பலரும் முன்வைக்கும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களில் நியாயம் இருக்கிறது. ஆனால், ஊடகங்களின் பாரபட்சத்தைக் காட்டி ஊழலுக்கு எதிரான போராட்டத்தைச் சிறுமைப்படுத்த முடியாது. இரண்டையும் பிரித்துப் பார்க்கவேண்டும்.

தவிர, ஒருவர் ஒரு விஷயத்துக்காகப் போராடினால் நீ ஏன் இந்த விஷயத்துக்காகப் போராடவில்லை என்று கேட்பதில் பொருளில்லை. அருந்ததி ராய் போன்றவர்களும் எல்லாப் பிரச்னைகளையும் பற்றி எழுதுவதில்லை. ஐ. பி. எல். ஊழல்கள் பற்றியோ அழகிரி மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றியோ அவர் ஏன் எழுதவில்லை என்று கேட்பது சுலபம். ஆனால், இப்படிப்பட்ட கேள்விகள் நம்மை எங்கேயும் கொண்டுசெல்லமாட்டா. ஒரு கோரிக்கையை முன்வைப்பதிலும் இன்னொன்றைக் கண்டுகொள்ளாமல் இருப்பதிலும் உள்ள அரசியலையும் உள்நோக்கங்களையும் அம்பலப்படுத்தவேண்டியது தான். ஆனால், நீ ஏன் இதைச் செய்யவில்லை என்று கேட்டுக் கொண்டிருப்பது மட்டுமே போதாது. எதுவுமே செய்யாமல் பலர் இருக்கும் ஒரு சமூகத்தில், யாரேனும் சிலர் எதையேனும் முன்வைத்துப் போராடுவதைப் பாராட்டுவதில் தவறில்லை.

அன்னா முன்வைக்கும் லோக் பால் மசோதாவில் ஏகப்பட்ட பிரச்னைகள் உள்ளன. ஒருவர்மீது குற்றம் சாட்டிக்

கைதுசெய்து வழக்கு தொடுக்கும் அதிகாரத்தை - காவல் துறைக்கும் சி. பி. ஐ.க்கும் இருக்கும் அதிகாரம் - லோக்பாலுக்கு வழங்கவேண்டும் என்று ஜன் லோக்பால் சொல்கிறது. இது பல சிக்கல்களுக்கு வழிவகுக்கக்கூடியது.

மக்கள் தங்கள் குறைகளை லோக் ஆயுக்தா (மாநில அளவில் லோக்பாலுக்கு இணையான அமைப்பு) அல்லது லோக்பாலிடம் முறையிடலாம் என்கிறது ஜன் லோக்பால். ரேஷன் அட்டை தொடர்பான பிரச்னைகள் முதல், கடமையைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க லஞ்சம் வாங்குவதுவரை எல்லாவற்றையும் லோக்பால் அல்லது லோக் ஆயுக்தாவிடம் கொண்டுசெல்லவேண்டும் என்றால் அதற்கு எத்தனை பெரிய அமைப்பு தேவைப்படும்? அந்த அமைப்பு அரசைச் சாராமல் தன்னிச்சையாக இயங்கும் அமைப்பாகவும் இருக்கவேண்டுமென்றால் அது எந்த அளவுக்குச் சாத்தியம்? அது நியாயமாக இயங்க என்ன உத்தரவாதம்? அதுவும் கட்டைப் பஞ்சாயத்தாக மாறாது என்று உறுதியாகச் சொல்லமுடியுமா?

நீதித்துறைமீது லோக்பாலுக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்பதும் பல அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. நீதித்துறையைச் சீர்திருத்துவதுதான் அதன் தவறுகளைக் குறைக்க சிறந்தவழி. நாட்டிலுள்ள நீதிமன்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் ஏற்கெனவே உள்ளது. அதனை மேலும் வலுப்படுத்தலாம். உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கண்காணிக்க ஒரு குழு அமைக்கலாம். மாறாக, லோக்பாலை நாட்டின் மிக உயர்ந்த அதிகாரம்கொண்ட அமைப்பாக மாற்றுவது ஏற்கக்கூடிய கோரிக்கை அல்ல. நீதிமன்றத்தின் முன் முயற்சியால்தான் இன்று பல அமைச்சர்களும் இதர பதவிகளில் இருப்பவர்களும் கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடலாகாது.

பத்துப்பேர் கொண்ட லோக்பால் குழுவில் நான்கு பேர் சட்டப் பின்னணியுடனும் மீதிப்பேர் வேறு எந்தப் பின்னணிகளுடனும் இருக்கலாம் என்றும் ஜன லோக்பால் சொல்கிறது. குற்றங்களை விசாரிக்க சட்டப் பின்னணி இல்லாதவர்களை நியமிப்பது அபாயகரமானது. அப்படியெனின், இதுவும் கட்டைப் பஞ்சாயத்துபோலத்தான் செயல்படும்.

இதுபோன்ற விமர்சனங்களும் மாற்று யோசனைகளும் பலதரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுக்கு மத்தியில் அன்னா ஹஸாரே மற்றும் அவரது குழுவினரின் நேர்மை குறித்த சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன. ஊழல் என்பது எல்லோரையும் பாதிக்கும் ஒரு பிரச்னை. அதை எதிர்த்து யார் எந்த நோக்கத்துக்காகப் போராடினாலும் அது வரவேற்கத்தக்கதுதான். பொது நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பான சுயநல நோக்கங்கள் குறைசொல்பவர்களுக்கு இருக்கும் என்றால் அவற்றை அம்பலப்படுத்துவது அவசியம். ஆனால், அவர்கள் எழுப்பும் குரலால் ஊழல் போன்றதொரு மாபெரும் பிரச்னைக்கு எதிரான மக்கள் கருத்தும் அரசு மீதான நெருக்கடியும் வலுப்பெறும் என்றால் அந்த அளவிலேனும் அதை வரவேற்க வேண்டும். அம்பலப்படுத்துவதோடு தங்கள் கடமை முடிந்தது என்று நினைக்கும் அறிவு ஜீவிகள், பிரச்னையைத் தீர்வைநோக்கி நகர்த்துவதில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

இவை எல்லாவற்றையும் தாண்டி அன்னா ஹஸாரே முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு ஆதரவு பெருகியிருக்கிறது. இந்த ஆதரவை அன்னா ஹஸாரேயின் முரண்பாடுகளையோ ஊடகங்களின் பாரபட்சத்தையோ ஜன் லோக்பாலின் போதாமைகளையோ முன்வைத்துச் சிறுமைப்படுத்திவிட முடியாது. காரணம், இது மக்களின் இயல்பான வெளிப்பாடு. அவர்களது நெடுநாள் ஆதங்கத்தின் வடிகால். இந்த உணர்வைப் புரிந்துகொள்ள மறுப்பதோ எளிமைப்படுத்துவதோ நல்லதல்ல.

ஓய்வுபெற்ற அதிகாரிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், குடும்பத்தைக் கவனித்துக்கொள்ளும் பெண்கள், 'பேஸ்புக்'கில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் 'வெள்ளைக் கொலர்' வர்க்கம், கூலித் தொழிலாளிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் என்று பலதரப்பினரும் அன்னாவின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். இவர்கள் யாரும் ஆட்சி அதிகாரத்தின் மையத்தில் இருப்பவர்கள் அல்லர். முறைகேடுகளின்மீதும் ஊழல்களின் மீதும் ஏற்பட்ட வெறுப்பு, அரசுமீதான விரக்தி, அரசியல் கட்சிகளால் திரும்பத் திரும்ப வஞ்சிக்கப்படும் ஏமாற்றம் ஆகியவற்றையே போராட்டத்துக்கான ஆதரவு பிரதிபலிக்கிறது. சலனங்கள் அருகிவரும் இந்தியப் பொதுவெளியில் இந்த அணிதிரளலும் உணர்ச்சி வெளிப்பாடுகளும் மிகவும் முக்கியமானவை. ■

## அரசு லோக்பாலும் ஜன் லோக்பாலும்

### அரசு லோக்பால் மசோதாவின் முக்கிய அம்சங்கள்:

புகாரை விசாரித்து அறிக்கை மாத்திரம் சமர்ப்பித்தல்.

சி. பி. ஐ.க்கு உத்தரவிட அதிகாரமில்லை.

பாராளுமன்ற சபாநாயகர் அல்லது சட்டசபைத் தலைவர் பரிந்துரைத்தால் மாத்திரமே அரசு விசாரணை நடத்தும்.

ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை.

பிரதமர், நீதிபதி ஆகியோரை விசாரிக்க அதிகாரமில்லை.

உறுப்பினர்களை அரசே நியமிக்கும்.

### ஜன் லோக்பாலின் முக்கிய அம்சங்கள்:

மக்களிடமிருந்து புகார்களைப் பெறவும் நடவடிக்கை எடுக்கவும் லோக்பாலுக்கு அதிகாரம் வேண்டும். எப். ஐ. ஆர். பதிவு செய்யும் அதிகாரமும் இதில் அடக்கம்.

லோக்பாலின் கீழ்தான் சி. பி. ஐ. ஊழல் ஒழிப்புப் பிரிவு செயல்பட வேண்டும்.

குறைந்தபட்ச தண்டனை 10 ஆண்டுகள் சிறை. அதிகபட்ச தண்டனை ஆயுள் தண்டனை.

பிரதமர், நீதிபதி ஆகியோரும் விசாரணை வரம்பிற்குள் வரவேண்டும்.

லோக்பால் உறுப்பினர்களை அரசு நியமிக்கக்கூடாது.



சிறப்பு கட்டுரை

# மீண்டும் ஒரு சிலுவைப் போர்?



**நோர்வேயில் பேரிங் பிறைவிக் நிகழ்த்திய சம்பவம் ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களுக்கும் பாடம் கற்பிக்கிறதா?**

நா. கண்ணன்



பொதுவாக நோர்வே என்றாலே அமைதியான, வம்பு தும்பில்லாத நாடு எனும் அபிப்பிராயம் எல்லோருக்கும் எழும். பிள்ளை பெறப்போகும் தாயாக இருந்தால், நீங்கள் வாழ வேண்டிய நாடு நோர்வே என்று ஒரு கணிப்பு சொல்கிறது. தாய்மைக்கும் மகப்பேறுக்கும் அவ்வளவு மதிப்புக் கொடுக்கும் நாடு அது. மனிதன் மனிதனாக வாழவே வசதி செய்யமுடியாத அரசுகள் கோலோச்சும் உலகில், மனிதன் தேவனாக வாழ வகைசெய்யும் நாடு நோர்வே. ஆனால், இந்த நிலை மாறப்போகிறது. அந்த நாட்டின் பிரதமர் சொல்வதுபோல், “நடந்ததைப் பார்த்தால், முன்னர் ஒரு நோர்வே; ஜூலை 22க்கு பின்னர் இன்னொரு நோர்வே என்றாகப்போகிறது’’. ஜூலை 22 நடந்த கொலை இப்படிப் பேசவைத்திருக்கிறது. அன்டேர்ஸ் பேரிங் பிரைவிக் எனும் ஓர் இளைஞன் பல ஆண்டுகள் திட்டமிட்டு, தலைநகரில் குண்டுவைத்து எட்டுப்பேரையும், பின் 19 மைல்களுக்கு அப்பாலுள்ள உத்தோயா என்னும் தீவுக்குச் சென்று, அங்கு நடந்துகொண்டிருந்த இளைஞர் முகாமிலிருந்தோரில் 68 பேரையும் கொன்று குவித்தான். வன்முறையற்ற நோர்வே நாட்டில் இப்படியொரு பழிச்செயலைச் செய்வது அவனுக்கு மிக எளிதாக இருந்திருக்கிறது. உதாரணமாக, அமெரிக்கா போன்ற நாட்டில், தலைநகரில் குண்டுவைப்பதென்பது பெரும்பாலும் முடியாத காரியம். அவ்வளவு கண்காணிப்பு அங்கு உண்டு. ஆனால், நோர்வேயில் அது இல்லை. இவன் காக்காய், குருவியைச் சுடுவதுபோல் சக நோர்வீஜியர்களைச் சுட்டுக் கொன்றுகொண்டிருக்கும்போது, இதையறிந்து இவனைப் பிடிக்க கொமாண்டோக்கள் அங்கு செல்ல 90 நிமிடங்கள் பிடித்திருக்கின்றன. அத் தீவுக்கு விரைவாகச் செல்ல காவல்துறைக்கு படகு வசதிகள் இல்லாததால், வணிக கப்பல்களை பயன்படுத்தி அவர்கள் விரைந்திருக்கிறார்கள். அதிலும் ஒரு படகு வழியில் தகராறு செய்திருக்கிறது. இப்படி, இவர்கள் போய்ச் சேர்ந்தபோது, கொலைகாரனே அலுத்துப்போய் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு, தலையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தானாம். இதுதான் நோர்வே.

எத்தனையோ வன்முறைகளை நாம் கண்டுகொண்டுதானிருக்கிறோம். சீனாவில் துப்பாக்கிகொண்டு பள்ளிச் சிறார்களைக் கொன்று குவித்தவருண்டு. அமெரிக்காவில் கல்லூரிக்குள் புகுந்து மாணவ, ஆசிரியர்களைக் கொன்று குவித்தவருண்டு. அவைகளிலிருந்து வேறுபடுத்தி இக் கொலையை நாம் ஏன் கவனிக்கவேண்டுமெனில், கொலைகாரன் இக் கொலைகளுக்குச் சொல்லும் காரணம் நமது மடியில் கைவைப்பதாக இருப்பதுதான். சமகால நோர்வே அரசியல் என்பது, பல்லின கூட்டு வாழ்வை ஆதரிப்பதாக உள்ளது. இதை இக் கொலைகாரன் எதிர்க்கிறான். முக்கியமாக, முஸ்லிம் மயமாகிவரும் ஐரோப்பிய போக்கை தடுக்கவேண்டும் என்பது அவனது கோரிக்கை. புதிதாக எழப்போகும் ஒரு சிலுவைப் போரின் ஆரம்பம் இது என்பதுபோல் அவனது பிரகடனங்கள் அமைகின்றன. தான் *Knights Templar* எனும் ஓர் இயக்கத்தின் உறுப்பினன் என்று சொல்லுகிறான் பிரைவிக். கிறிஸ்தவ மத காவலர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் இந்த சேனாதிபதிகள். மதத்தைக் காக்க உயிரையும் பணயம் வைக்கும் போர்வீரர்கள். அப்படியோர் இயக்கம் ஐரோப்பாவின் மத்திய காலத்தில் பிரபலமாகவிருந்து, முஸ்லிம்கள் கையிலிருந்த கிறிஸ்தவ புனிதத் தலங்களை மீட்டெடுத்ததாக சரித்திரம் கூறுகிறது. பிரைவிக் கூறும் கோவில் காப்பாளர் சங்கம் என்பது நோர்வேயிலோ, இங்கிலாந்திலோ பதிவு செய்யப்படவில்லை என்று நோர்வே அரசு சொல்கிறது. அப்படியோர் எழுச்சியோ, கட்டுமானமான சங்கமோ இல்லை எனினும், அப்படியானதொரு போக்கு ஐரோப்பாவில் தலைதூக்கிவருவதை மறுக்கமுடியாது. குறிப்பாக, சுவிஸ் அரசு தனது நாட்டில் இனி மசூதிகள் கட்டக்கூடாது என்று சட்டம் இயற்றியுள்ளது. டென்மார்க்கில் கோஷா (முக்காடு) போட்டுக்கொண்டு பெண்கள் நடமாடமுடியாது என்று சட்டம் வந்துள்ளது. இவையெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள விஷயங்கள்.

இதைப் புரிந்துகொள்ளவேண்டுமெனில் அடிப்படையாக ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். ஐரோப்பா என்பது கிறிஸ்தவ பூமி. கிறிஸ்தவத்தைக் காக்க புனிதப் போர்கள் கண்ட பூமி. சிலுவைப் போரில் மரித்தவர்களின் எண்ணிக்கை இரண்டாம் உலகப் போரில் மரித்தவர்களைவிட கூடுதல் என்பதொரு கணக்கு. மேலும், கிறிஸ்தவமும் இஸ்லாமும் மற்றையோரைத் தத்தம் மார்க்கங்களுக்கு மாற்றும் நோக்கமுடைய குழுமச் சமயங்கள். உதாணமாக, இந்து மதம் வேற்று மதத்தினரை இந்துக்களாக புனித ஸ்நானம் செய்யும் வழக்கமில்லை. ஆயின், கிறிஸ்தவமும் இஸ்லாமும் தம் மார்க்கத்துக்கு கூடியவரை எவ்வளவு பேரைச் சேர்க்கமுடியுமோ அவ்வளவு லாபம் என்று கருதும் நெறிகள். இஸ்லாம் தன் மார்க்கத்தில் இல்லாதோரை குறைபாடுடையவர் என்று கருதும் வழக்கமுள்ளது. எப்படியும், அவர்களுக்கு நற்கதி கிடையாது; எனவே, அவர்களை அழிப்பதில் தவறில்லை என்பது போன்



படம்: கு. சிதம்பரப்பிள்ளை

**ஈழ பூமியில் பௌத்தம் என தொல்லியல் சான்றுகள் கிடைத்தால், அவையெல்லாம் சிங்களத் தொன்மைக்கு சான்றுகள் என்று சிங்களவர்களால் துணிந்து பேசமுடிகிறது. நம்மால் தமிழ் பௌத்தம்பற்றி வாய் பேசமுடியா நிலையில், அகச்சான்றுகளை அழித்து ஒழித்துள்ளோம்**

**நமது வழிபாட்டு முறைகள் உருவாக்கும் ஒரு 'கலவரம்' பிற இனத்தவரின் கவனத்தை கவர்வது இயற்கை**

றதொரு புரிதல்கூட உண்டு. ஆக, இப்படிக் குணமுள்ள இரு சகோதர மதங்களுக்குள்ளான போட்டி, நூற்றாண்டுகளாக உலகை உலுக்கி வருகின்றது. துருக்கியரின் ஒத்தோமான் (உஸ்மானியா) பேரரசு இஸ்லாமை முன்வைத்து ஐரோப்பாவை ஆக்கிரமித்து ஆண்ட பேரரசு. இப் பிடியிலிருந்து மீள கிறிஸ்தவ புனித சேனாதிபதிகள் தோன்றி, மெல்ல மெல்ல ஐரோப்பாவை மீட்டு, கிறிஸ்தவத்துக்குள் மீண்டும் தக்கவைத்தனர். அதனால்தான் சுவிஸ், ஜெர்மனி போன்ற அரசுகள் தயங்காமல் தங்கள் நாடுகளை கிறிஸ்தவ நாடுகள் என்று பிரகடனப்படுத்துகின்றன. இங்கிலாந்தும் பிற ஐரோப்பிய நாடுகளும் அடிப்படையில் கிறிஸ்தவ நாடுகளே. எனவேதான் இந்த அடிப்படைவாதம் எவ்வளவுதான் நளினமான பின்நவீனத்துவ போர்வை போர்த்திக்கொண்டாலும் வெளியே அவ்வப்போது தலைகாட்டுகிறது.

இது, ஐரோப்பாவுக்கு மட்டுமான தனிக் கதையல்ல. இந்திய உப கண்டத்திலும் இந்து மதத்தை மீட்டெடுப்பதற்காக முன்னர் சீக்கியமும், சமகாலத்தில் சிவசேனா போன்ற அமைப்புகளும் தோன்றியுள்ளன. தென் தமிழகத்தில் சமணர்கள், பௌத்தர்களிடமிருந்து சைவத்தை மீட்டெடுக்க புனிதப் போர்கள் நடந்துள்ளன. சமணர்களைக் கழுவேற்றிய கதைகளும், சமண ஆலயங்களை இந்து ஆலயங்களாக மாற்றிய கதைகளும் உண்டு. புறநகர்த் தெய்வமான ஐயனார் அடிப்படையில் சமணத் தெய்வம் என்று சொல்வாரும் உண்டு. திருமங்கை ஆழ்வாரின் கதையில் இலங்கைவரை சென்று பௌத்த விகாரங்களை அழித்த கதைகள் பூடகமாக சொல்லப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் தமிழகமெங்கும் கோலோச்சிய சமண, பௌத்த மதங்களின் சுவடுகள்கூட இல்லாவண்ணம் அழித்தொழித்த வரலாறு தென் தமிழக வரலாறு. இது மிகவும் பூரிப்படையவேண்டிய சேதி அல்ல. ஏனெனில், உலகுக்கு ஜென் பௌத்தத்தை வழங்கியது தமிழகம் எனும் பேருண்மைக்கான சான்றுகள் துளிகூட இல்லாவண்ணம் தமிழகம் வரண்டு நிற்கிறது. ஈழ பூமியில் பௌத்தம் என தொல்லியல் சான்றுகள் கிடைத்தால், அவையெல்லாம் சிங்களத் தொன்மைக்கு சான்றுகள் என்று சிங்களவர்களால் துணிந்து பேசமுடிகிறது. நம்மால் தமிழ் பௌத்தம்பற்றி வாய் பேசமுடியா நிலையில், அகச்சான்றுகளை அழித்து ஒழித்துள்ளோம். இது பாராட்டப்படவேண்டிய விஷயமல்ல. மணிமேகலை சொல்லும் உண்மைகளைப் பார்த்தால், தென்கிழக்கிலும் தூர கிழக்கிலும் பௌத்தம் பரவ இலங்கைத் தமிழகம் வழிகோலியிருப்பது தெரியும். இலங்கை வழியாகவே பௌத்தம் சீவகம், சியாம் போன்ற நாடுகளுக்கு போயிருப்பது ஆராய்ந்தால் புரியும். இலங்கைத் தமிழர்களின் தனி அடையாளம் என்பது சைவம் மட்டுமல்ல. அப்படியொரு புனைகதை பின்வந்த சைவத் தொண்டர்களால் புகட்டப்பட்டுள்ளன. பௌத்தம் என்தும் இலங்கைத் தமிழர்களின் அடையாளமே.

ஒரு நாட்டில் ஊறிப்போன சமயங்களை பிற சமயங்கள் வந்து மாற்ற முயலும்போது ஏதோ ஒரு வகையில் புனிதப் போர்கள் வெடிக்கின்றன. கொல்லாமை சமயப் பண்பாடு எனினும் சமயத்தின் பெயரால்தான் உலகில் மிகப்பெரிய வன்முறைகள் வெடித்துள்ளன. ஹிட்லரைப்போன்ற ஒரு கிறிஸ்தவனைக் காணவியலாது. கிறிஸ்தவத்தின் பெயரால்தான் இரண்டாம் உலக யுத்தம் நடந்தது. இப்படியான ஐரோப்பிய பின்னணியை வைத்துப் பார்க்கும்போது, பிரைவிக்கின் தோற்றம் தனி நிகழ்வல்ல என்பது புரியும். கடந்த மூன்று அல்லது நான்கு தசாப்தங்களில்தான் ஐரோப்பா அமைதியாக முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது. அதன்முன், உள்நாட்டுப் போர்கள் மலிந்திருந்த பூமி அது. காலனித்துவ முறைமையை ஐரோப்பா கைக்கொண்டதன் விளைவு இன்று ஐரோப்பா முழுவதும் முன்னைய காலனித்துவ மக்கள் சூழ்ந்திருக்கிறார்கள். லண்டன் போன்ற நகரத்துள் நடமாடினால், வேற்று கிரகத்தில் நடமாடுவது போன்றதொரு பிரமையை ஏற்படுத்தும் வண்ணம் பல்லின மக்கள் கூட்டம். இது ஐரோப்பிய வெள்ளையருக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குமே அச்சமூட்டக்கூடிய விஷயம். இங்கிலாந்தில் கடுமையான சட்டம், ஒழுங்கு பராமரிப்பு இருப்பதால்தான் இத்துணை வித்தியாசமான மக்கள் வாழ்கின்றபோதும் இங்கு வன்முறைகள் நிகழாமல் உள்ளன. தமிழர்களின் சாதீயக் கண்கொண்டு பார்த்தால் இதனை இன்னும் சரியாக விளங்கிக்கொள்ள முடியும். உதாரணமாக, இன்றுகூட ஒரு சாதி மக்கள் அதிகமாக உள்ள தெருவில், கீழ்சாதி மக்களின் நடமாட்டம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அப்படி இருக்கையில், முற்றிலும் வேறான தோற்றமும் பழக்க வழக்கங்களும் சமய ஒழுங்குமுள்ள பல்வேறு இனங்களுள்ள லண்டன் போன்ற ஐரோப்பிய நகரில் வன்முறை நிகழாமல் தடுப்பது அரிய செயலே.

பிரைவிக்கின் சிந்தனை இவ்வகையில் செல்வதை அவதானிக்க முடிகிறது. ஒருவகையில், மலேசியர்கள் முன்வைக்கும் 'பூமிபுத்ரா' எனும் கோட்பாட்டின் அடிப்படையில்தான் பிரைவிக்கும் 'ஐரோப்பா ஐரோப்பியர்களுக்கு' என்று சொல்கிறான். அங்கு முஸ்லிம் மக்கள் கூடுதலாக வந்து வாழ்வதை 'ஆக்கிரமிப்பு' என்று அவன் காண்கிறான். பல்லினக் கூட்டு வாழ்க்கையை ஆதரிக்கும் பின்நவீனத்துவ நோர்வே அரசு பிழை செய்கிறது என்று காண்கிறான். இந்த மனநிலையை சாதிய முறைமையில் வாழும் இந்திய வம்சாவழியினரால் எளிதில் புரிந்துகொள்ளமுடியும் என்று நம்பலாம். ஒரு காலத்தில் உயர்சாதி இந்துக்கள் வாழ்ந்த பகுதிகளில் தலித்துகளும் பிற தாழ்த்தப்பட்டோரும் செருப்பு அணிந்துகொண்டு நடப்பது கூட பிழை என்று வாழ்ந்த சமுதாயம் இந்தச் சமுதாயம். இதை நம்மால் புரிந்துகொள்ள முடிந்தால், பிரைவிக் போன்றோரின் செயல்பாடுகளைப் புரிந்துகொண்டு, முன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளமுடியும்.

உதாரணமாக, தமிழ் இந்துக்கள் ஒழுக்கமிக்கவர்கள்; கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள்; கடின உழைப்பாளிகள். அகதிகளாக வந்துசேர்ந்த இடத்தில் இக் குணங்களால் இன்று செல்வாக்குள்ள ஓர் இனமாக முன்னேறிவருகின்றனர். ஆகம வழிபாட்டு முறைகள் இந்தியாவில் தழைத்தபோது 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' எனும் அளவுக்கு அதை ஏற்றுக்கொண்டது தென் தமிழகம். இக்குணம், வெளிநாட்டுக்கு அகதியாக வந்துசேர்ந்த நிலையில்கூட தீவிரமாக செயல்படுவதை காணக்கூடியதாக உள்ளது. ஐரோப்பிய பூமியில்தான் எத்தனை கோவில்கள் இப்போது? லண்டனில் உள்ள பல இந்து ஆலயங்கள், வழிபாடற்றுக் கிடக்கும் கிறிஸ்தவ தேவாலயங்களைத் திருத்திக் கட்டியவை. இந்தப் போக்கு எவ்வளவுதூரம் வரவேற்கத்தக்கது? சமீபத்தில், லண்டன் ஹீத்ரு விமான நிலையத்துக்கு அருகில் உள்ள ஹேய்ஸ் பகுதியில் ஒரு விடுதியில் தங்கியிருந்தேன். 'கூகுளில்' தேடினால், அந்த ஹோட்டல் இருக்கும் இடத்தை ஒரு மெதடிஸ்ற் தேவாலயம் என்றே படத்துடன் காட்டுகிறது. ஆனால், அது ஒரு லொட்ஜ். அதனை நடத்துபவர் ஓர் இந்தியர். ஆக, மலிவான விலைகளில் தேவாலயங்கள் விற்கப்படுவதை காணமுடிகிறது. வழிபாடற்றிருக்கும் ஒரு தேவாலயத்தை லொட்ஜாக மாற்றுவதைவிட, இன்னொரு வழிபாட்டுத் தலமாக்குவது தவறில்லை என்றே தோற்றுகிறது. இப்படித்தான், தமிழகத்தில் முன்பிருந்த சமணர் கோவில்களெல்லாம் இந்துக் கோவில்களாக மாறியிருப்பதை அறியமுடிகிறது.

ஆயினும், ஐரோப்பாவில் கிறிஸ்தவம் இன்றும் வாழும் பூமியில் அவர்களது தேவாலயத்தைத் திருத்தி, நம் கோவிலாக மாற்றி வழிபடும்போது, அது அவர்களின் கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்க்க இயலாது. இன்று அது ஒரு பிரச்னையாக தோன்றாமலிருக்கலாம். ஆனால், நாளை ஓர் இனக் கலவரம் தோன்றும்போது இவ்வாலயங்கள் இலக்காகாமல் தப்பிப்பது அரிது. அமெரிக்காவில் 9/11 என்றழைக்கப்படும் நியூயோர்க் நகர தாக்குதலின் பின்விளைவாக, யாரெல்லாம் வித்தியாசமாக தெரிகிறார்களோ அவர்களெல்லோரும் முஸ்லிம் தீவிரவாதிகள் என்று தாக்கப்பட்டனர். எந்த வம்புக்கும் போகாத சீக்கிய குடிமகன் ஒருவர், அவர் வித்தியாசமான தலைப்பாகை அணிந்ததன் காரணமாக தாக்கப்பட்டார். ஜப்பானின் 'பேர்ள்' துறைமுக தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்காவில் வாழும் ஜப்பானியர்களின் வாழ்வு கவலைக்குரியதானது. இனக்கலவரம் பற்றிய தோப்பில் முகம்மது மீரானின் நாவலொன்று, இப்படி நிர்க்கதியாகிவிட்ட குடிகள்பற்றி மிக அழகாக பேசும். அம்மாதிரியான ஒரு சூழலில், தேவாலயங்களை ஆக்கிரமிக்கும் சாத்தான்கள் என்றுதான் அவர்கள் நம்மைப் பார்க்கத்தோன்றும். இன்றளவும், இஸ்லாம் மார்க்கத்துக்கு வராத அனைவரையும் 'பக்கீர்' எனக்காணும் போக்கு உள்ளதுதானே!

கோவில் திருவிழா எனும் பேரில் நம்மவர்கள் ஊர்வலங்கள் (உற்சவங்கள்) நடத்தும்போது சட்டை அணியாமல், தங்கச் சங்கிலி மார்பில்தவழ நடைபோடும்போது அது அதிக கவனம்பெறுகிறது. பட்டுச் சேலையும், தங்க ஆபரணங்களும் அணிந்து நம் பெண்டிர் ஊர்வலம் போகும்போது, நம்மைவிடத் தாழ்ந்த நிலையில் வாழும் ஆபிரிக்க, ஆசிய குடிகளின் அசூசைக்கு ஆளாவதைத் தவிர்க்கமுடியாது. நமது வழிபாட்டு முறைகள் உருவாக்கும் ஒரு 'கலவரம்' (சத்தமான இசை, வேல் குத்தி காவடி இழுப்பது போன்ற ஜீவ இம்சைக் காட்சிகள்), அதேநேரத்தில் நாம் குவித்திருக்கும் செல்வம் (தங்க நகைக் கிட்டங்கி) என்பன பிற இனத்தவரின், வெள்ளையரின் கவனத்தைக் கவர்வது இயற்கை. இதன் பின்விளைவுகள் எத்தகையனவாக இருக்கும் என்பதை இப்போது சொல்லமுடியாவிடினும், பிரைவிக் நடத்திய படுகொலைக்கும் இதற்கும் ஏதோ ஒருவகையில் சம்பந்தமிருப்பதை உணராமல் இருக்கமுடியவில்லை. இரண்டாம் உலகப்போருக்கு முன்பு பெரும்பாலான ஐரோப்பிய வங்கிகள் யூதர்களின் ங்கைகளில் இருந்தன. அவர்களின் செல்வக் குவிப்பு எல்லோர் கவனத்தையும் பெற்றதன் விளைவே மூன்றாம் ரைக் கட்சியும், இரண்டாம் உலகப்போரும்.

பிரைவிக் கொலைகள் சொல்லும் சேதி எளிது: 'இது எங்கள் மண்; இது எங்கள் மதம். வந்தேறிகள் வெளியேறுங்கள்' என்பதுதான் அச் சேதி.

அமைதிப் பூங்காவான நோர்வேயில் பிரேவிக் எழுப்பிய அபஸ்வரம் நம்து காதுகளிலும் கேட்கிறது. ■


Kumaran Silks
since 1955
PANAGAL PARK, CHENNAI - 17
TAMILNADU, INDIA.
www.kumaransilks.net
CUSTOMER CARE
(044) 4222 0077
12, Nageswaran Road, Panagal Park, T.Nagar, Chennai-17. Ph:(044)-24343544 / 3727 / 3757.

அட்டை செய்தி

## பென் பவிங்க்

# ஒரு தமிழ்க் குரல்

### யுத்தகால இலங்கையில் மக்களின் தினசரி அவலங்களின் சாட்சியம்

**மு. நித்தியானந்தன்**

இருபத்தேழு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, அதில் 17 ஆண்டுகாலம் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த பென் பவிங்க் ஒரு டச்சு பாதிரியார். சரளமாக தமிழில் உரையாற்றவல்லவர். அவர் இளைப்பாறி, நெதர்லாந்தில் அம்ஸரர்டாமுக்கு திரும்பிவந்தபோது, "நான் இங்கு இடம்பெயர்ந்த ஒரு யாழ்ப்பாணத்தானைப்போல இருக்கிறேன்'' என்று பவிங் கூறினார். அவரது மரண இறுதிச் சடங்குக்கான அறிவிப்பில், 'கூாந துயககயே ஆயபே - யாழ்ப்பாணத்து மனிதன்' என்றே நெதர்லாந்தில் அவரை அடையாளப்படுத்தியிருந்தனர்.

2009ஆம் ஆண்டு கடுங்குளிரில் ஒரு நாள். லண்டன் ஹரோவில் பென் பவிங்குக்காக காத்திருந்தேன். பத்து மணிக்கு சந்திப்பதாக கூறியிருந்தார்; பத்து மணிக்கு அவர் வரவில்லை. நேரத்தைக் கடைப்பிடிப்பதில் பென் பவிங்க் மிகவும் கறாரானவர். புதிய இடமாகையால், இடத்தை விட்டுவிட்டதாக தொலைபேசியில் அறிவித்தவர், சிறிதுநேரத்தில் வந்து சேர்ந்துவிட்டார்.

85 வயது; சுகவீனமுற்றிருந்தார்.

ஆனால், உடலில் - தோற்றத்தில் - மிடுக்கில் - சுறுசுறுப்பில் அது தெரியவில்லை.

பவிங்க், தென்னிலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய காலப்பகுதி, இலங்கைத் தீவு இரத்த ஓடையில் மிதந்த நாள்கள். ஆயுத அராஜகத்தின் முன்னால் முழு சமூகமுமே மண்டியிட நிர்ப்பந்திக்கப்பட்ட அவலச் சூழலை இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பவிங்க் அவதானித்தார். இராணுவ அட்டூழியங்களையும், அதற்கு இணையான ஆயுத இயக்கங்களின் வன்முறைகளையும் அவர் கண்கூடாகக் கண்டார். சாதாரண மக்கள் இந்தக் கொடூரங்களையெல்லாம் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை ஆவலோடு நோக்கினார்.

இலங்கையின் கொடூர யுத்த நாள்களில் தான் கேட்டவற்றை, பார்த்தவற்றை, தனது சொந்த அவதானிப்புகளை, மதிப்பீடுகளை பவிங்க் டயறிக் குறிப்புகளாக பதிவுசெய்தார். 23 அப்பியாசக் கொப்பிகளில், ஆயிரக்கணக்கான பக்கங்களில் டச்சு மொழியில் இந்தக் குறிப்புகள் பதிவாகியுள்ளன.

நண்பர்கள் இந்த டயறிக் குறிப்புகளை நூலாக வெளியிடலாமே என்று வற்புறுத்தியதில், டச்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் தானே அவற்றை மொழிபெயர்த்திருந்தார். பல ஆண்டுகால இடையறாத முயற்சி.

டயறி நூலாக்கம் பற்றிய ஆலோசனைக்கான அந்த சந்திப்புதான் அவருடனான இறுதிச் சந்திப்பாகிவிட்டது. கற்றை கற்றையாக குவிந்துபோன டயறிப் பதிவுகள். பிரமிப்புத்தரும் பணி. சுவாரஷ்யமான பதிவுகள்.

டயறிப் பதிவுகளின் போக்கைக் கூர்ந்து பார்த்தபின், அவற்றை இரண்டு பாகங்களாக, தனித்தனியாக வெளியிடுவதுதான் உகந்ததாக இருக்கும் என்று கூறிய ஆலோசனையை பவிங்க் ஏற்றுக்கொண்டார். மேலும், தனி இரு நூல்களாகப் பிரித்துக்கொண்டால்தான் இந்தப் பதிவுகளை 'எடிற்' செய்வதற்கும் சௌகரியமாயிருக்கும் என்று நான் கருதினேன்.

*Of Tamils and Tigers, A journey through Srilanka's war years (Part I 1988 - 1994)* என்ற முதல் தொகுதியாக வெளிவந்திருக்கும் பென் பவிங்கின் டயறிப் பதிவுகளை அவருடன் இணைந்து மைத்ரேயி ராஜேஷ்குமார் நுட்பமாக செம்மைப்படுத்தியிருக்கிறார் .

தன்னை யாராவது சரியாக நெறிப்படுத்தியிருந்தால், தான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் தமிழை முழுமையாகக் கற்று, ஒரு தமிழ்ப் புலமையாளனாகியிருப்பேன் என்று பவிங்க் என்னிடம் கூறியிருந்தார். தமிழுக்குப் பணியாற்றிய ஐரோப்பிய கிறிஸ்தவ பாதிரிமார்களின் அணியில் தானும் இடம்பெற்றிருக்கலாம் என்ற மன ஆதங்கம் பவிங்கிடம் இருந்திருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன்.

க்ரியாவின் 'தற்காலத் தமிழ் அகராதி' திருத்திய புதிய பதிப்பு வெளியாகியபோது, அதில் சேர்க்கப்பட்ட சில சொற்களைக்குறித்த விபரங்களுடன் க்ரியாவின் சென்னை அலுவலகத்துக்கு பவிங்க் சென்றபோது, அந்த டச்சுக்காரரைப் பார்த்து வியப்படைந்திருக்கிறார் 'க்ரியா' நிர்வாகி இராமகிருஷ்ணன்.

பவிங்க் விட்டுச்சென்றிருக்கும் டயறிக் குறிப்புகள், சமகால ஈழத்துத் தமிழரின் ஓர் அரசியல், சமூக ஆவணம். சாதாரண மனிதரின் பிரச்னைகளை, அன்றாட அவலங்களை, இராணுவ அட்டூழியங்களை, விடுதலை இயக்கங்களின் வன்முறையை, அரசாங்க அதிகாரிகளின் மெத்தனத்தை நேர்மையாக பதிவுசெய்திருக்கிறார் அவர்.

கொழும்பில் ஓர் உயர்மட்ட அரசாங்க அதிகாரியைச் சந்தித்து, தமிழர்களின் பிரச்னைக்கு முடிவுகாண அரசாங்கம் சரியான தீர்வுத் திட்டத்தை

**தமிழுக்குப் பணியாற்றிய ஐரோப்பிய கிறிஸ்தவ பாதிரிமார்களின் அணியில் தானும் இடம்பெற்றிருக்கலாம் என்ற மன ஆதங்கம் பவிங்கிடம் இருந்திருக்கக்கூடும்**



மகன்,
மருமகள்

முன்வைக்கவேண்டும் என்று பவிங்க் வலியுறுத்தியபோது, சிங்கள மக்கள் அதற்கு முழு சம்மதம் தெரிவிக்கவேண்டும் என்று அந்த அதிகாரி கூறவும், 'அதற்குள் வடக்கில் முழு சமூகமும் அழிந்துபோய்விடும்' என்று பதில்கூறிவிட்டு வந்திருக்கிறார் பவிங்க்.

நெதர்லாந்தில் ஜெர்மனியின் பாசிச அதிகாரத்தின்போது, பாசிச ஒடுக்குமுறைக்கு எதிராக, துண்டுப்பிரசுரங்களை இரகசியமாக விநியோகித்த தனது இளமைக்கால அரசியல் அநுபவங்களை பவிங்க் என்னுடன் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

இளமையிலேயே பாசிசத்தின் கோரத்தைத் தரிசித்து, அதற்கு எதிராகப் போராடிய பவிங்கின் மன ஆழத்தில் மனிதாபிமானமும், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கிளர்ச்சியும் வேரோடியிருந்தன.

டச்சுக்காரனாகவும் யாழ்ப்பாணத்தானாகவும் வெளியாளாகவும் உள்ளூர்க்காரனாகவும் அபூர்வமான ஒரு பார்வையை அவர் தமிழ் சமூகத்தின்மீது வீசியிருக்கிறார்.

பாசிசத்தைத் தனது சொந்த தேசத்தில் தரிசித்திருந்த பவிங்க், அத்தகையதோர் அடக்குமுறை அராஜகம் ஈழத்தில் உருப்பெற ஆரம்பித்தபோது, அதனைத் துல்லியமாக அவரால் துரிதமாகவே அடையாளம் காணமுடிந்தது.

கிளாலியிலிருந்து அனைத்து மார்க்கங்களிலும் அவர் பயணித்திருக்கிறார். அரசாங்க தடையை மீறி கிளாலிப் பயணம் மேற்கொள்வது, யாழ்ப்பாண மக்களின் சுகதுக்கங்களுடன் பங்குகொள்வதற்கு இணையானது என்று இந்த டச்சு தமிழ்மகன் கருதியிருக்கிறார்.

அரசாங்கத்தாலும், இராணுவத்தாலும். விடுதலை இயக்கங்களாலும் பலிக்கடாக்களாக்கப்பட்ட சாதாரண இலங்கைத் தமிழ் மக்களின் ஓர் ஆத்மார்த்த குரலாக இந்த டச்சு தமிழன் விகசிக்கிறார். ■

**பவிங்க் விட்டுச்சென்றிருக்கும் டயறிக் குறிப்புகள் சமகால ஈழத்துத் தமிழரின் ஓர் அரசியல், சமூக ஆவணம். சாதாரண மனிதரின் பிரச்னைகளை, அன்றாட அவலங்களை, இராணுவ அட்டூழியங்களை, விடுதலை இயக்கங்களின் வன்முறையை, அரசாங்க அதிகாரிகளின் மெத்தனத்தை நேர்மையாக பதிவுசெய்திருக்கிறார்**

புகைப்படம்:
கே. கிருஷ்ணராஜா



பென் பவிங்க் கமெராவுள்
கிளாலி பயணம்

# பென் பவிங்க்

# சுய குறிப்பு

1924ஆம் ஆண்டு டச்சு மிஷனரி பெற்றோரின் மகனாக இந்தோனேசியாவில் பிறந்தேன். 1939ஆம் ஆண்டில் நாங்கள் நெதர்லாந்து திரும்பினோம்.


இரண்டாம் உலக மகாயுத்தத்தையும், ஜெர்மன் நாஸி படையினரால் ஒல்லாந்து ஆக்கிரமிக்கப்பட்டதையும் நாங்கள் அநுபவிக்க நேர்ந்தது. இந்த அநுபவம் என்னுள் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. எதேச்சாதிகார, பாசிஸ ஆட்சிக்கு எதிரான ஆழ்ந்த வெறுப்பை அது என்னுள் உருவாக்கியது.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபின்னர், நெதர்லாந்தின் *Utrecht* பல்கலைக்கழகத்தில் எனது சட்டப் படிப்பை முடித்தேன். இலங்கையின் கிறிஸ்தவ மதபீடத் தலைவர் வண. கலாநிதி டி. ரி. நைல்ஸ் ஆலோசனையின்பேரில், 1954இல் நான் எனது மனைவியுடன் கிறிஸ்தவ மிஷனரியாக வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிய யாழ்ப்பாணம் வந்தேன். யாழ்ப்பாணத்தில் 17 ஆண்டுகாலம் பணியாற்றியபின், 1972இல் ஒல்லாந்து திரும்பினோம்.

மீண்டும் 1988ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கை தேசிய கிறிஸ்தவ கவுன்சிலின் நிவாரண, மறுவாழ்வு அலுவலராக பதவியேற்று இலங்கை சென்றேன். அப்போது இலங்கையின் சகல இடங்களுக்கும் பணிநிமித்தமாக சென்றிருக்கிறேன். 1990இல் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் போர்மூண்டபின் நான் வடக்கு-கிழக்குக்கு மாத்திரமே பயணம் செய்தேன். 1994இல் யாழ்ப்பாணத்தில் தங்கி பணியாற்ற தொடங்கியபோது, யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த அடுத்த பத்து ஆண்டுகாலம் மோதலும் வன்முறையும் நிறைந்த காலமாகும். 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கையைவிட்டு இறுதியாக வெளியேறினேன்.

## பென் பவிங்க்

# டயாரி குறிப்பிலிருந்து...




### மண்ணெண்ணெய் லீற். 160 ரூபா

19 பெப்ரவரி 1993, பரந்தன்

புலிகளைப்பற்றி மேலும்சில கதைகளைக் கேள்விப்பட்டேன். மண்ணெண்ணெய் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்த எட்டு லொறிகளைப்பற்றிய கதை இதில் ஒன்று. ஒவ்வொரு லொறியும் 40 பீப்பாய் மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு வந்திருந்தது. கொழும்பு விலைப்படி ஒரு லீற்றருக்கு 9 ரூபா வீதம் 30 பீப்பாய் மண்ணெண்ணெயை புலிகள் எடுத்துக்கொண்டு, வியாபாரிக்கு போக்குவரத்துச் செலவையும் சேர்த்துக்கொடுத்திருக்கிறார்கள். மீதியிருந்த 10 பீப்பாய் மண்ணெண்ணெயை ஒரு லீற்றர் 160 ரூபா வீதம் பொதுமக்களுக்கு விற்று, அந்த வியாபாரிக்கு மண்ணெண்ணெய் வியாபாரத்தில் லாபம் ஈட்டவும் அநுமதித்திருக்கிறார்கள்.

விவசாயிகள் ஓர் ஏக்கர் காணிக்கு ஆயிரம் ரூபாவும், ஒரு ட்ராக்டருக்கு 25 ஆயிரம் ரூபாவும் புலிகளுக்கு வரியாக செலுத்தவேண்டியிருந்தது. இரணைமடு குளத்திலிருந்து பாயும் பாசன நீரில் 10 வீதத்தை புலிகள் தமது சொந்த காணிகளுக்கு பாவித்துக்கொண்டு, மீதியையே சாதாரண விவசாயிகளுக்கு வழங்கியுள்ளனர். தமது ட்ராக்டரை புலிகளுக்கு பலாத்காரமாக இரவல் கொடுத்த ஒரு விவசாயியிடம் நான் பேசினேன். எஞ்சின் மோசமடைந்தநிலையில் அந்த ட்ராக்டர் தன்னிடம் திருப்பித் தரப்பட்டதாக அவர் கூறினார். வேண்டுமானால், எஞ்சினைத் திருத்துவதற்கு புலிகளின் கராஜில் கொண்டுவந்துவிடலாமென்று புலிகள் அவரிடம் கூறியிருக்கிறார்கள். மீதமுள்ள எஞ்ஜினின் உதிரிப் பாகங்களை புலிகள் கழற்றி எடுத்துக்கொண்டு, எஞ்ஜினையே கபளீகரம் செய்துவிடக்கூடும் என்று பயந்து, தான் அந்த கராஜ் பக்கமே போகவில்லை என்று அவர் என்னிடம் கூறினார்.

### பயங்கரவாதம் ஒழிந்தால் அமைதி

15 ஒகஸ்ட் 1993, கொழும்பு

கொழும்பிலுள்ள ஒரு தமிழ் கிறிஸ்தவ தேவாலயத்துக்குச் சென்று, பூசை முடிந்தபின்னர் அங்குள்ளவர்களிடம் தான் பேசிய அநுபவத்தை ஒரு நண்பர் என்னிடம் விபரித்தார். யாழ்ப்பாணத்திலிருந்து எல்லா முஸ்லிம்களையும் வெளியேற்றியதை அவர்கள் நியாயப்படுத்தியதுடன், விடுதலைப் புலிகளால்தான் தாங்கள் கொழும்பில் பாதுகாப்பாக இருப்பதாகவும் கூறியுள்ளனர். மக்கள் இவ்வளவு குருட்டுத்தனமாக இருப்பார்களா என்று யோசிக்க ஆச்சரியமாக இருக்கிறது.

இதேபோல, மறுபக்கத்திலும் ஒரு குருட்டுப் பார்வை உள்ளது. இனப் பிரச்னையைப்பற்றி நான் பேசியபோது ஒரு சிங்கள மதபோதகர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். அவரைப்பொறுத்தவரையில், இனப் பிரச்னை என்று ஒன்று இல்லை. அங்குள்ள சிங்கள கிராம மக்களுடன் பேசிப் பார்க்கையில், அவர்களுக்கு தமிழ் மக்களுடன் ஒரு பிரச்னையும் இருக்கவில்லை. ஒருவேளை, சில பொருளாதார முரண்பாடுகள், போட்டிகள் இருந்திருக்கக்கூடும். மற்றையபடி, பயங்கரவாதம்தான் அவர்களுக்கு பெரும் பிரச்னையாகவும், அதுவே சகல மோதல்களுக்கும் வித்திட்டதாகவும் கருதுகிறார்கள். இதேமாதிரியான அணுகுமுறையைத்தான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவும் வலியுறுத்திவருகிறார். இதன் விளைவு என்னவெனில், சிங்களவர்கள் பக்கத்தில் ஒரு மாற்றமுமே தேவையில்லை; எந்தத் திருத்தங்களும் அவசியமில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆக, வேண்டிய ஒரு விடயம், பயங்கரவாதத்தை நிறுத்துவதுதான். அதன்பின்னர் அனைவரும் சமாதானமாக இணைந்து வாழலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். பயங்கரவாதம் எவ்வாறு ஆரம்பித்தது என்ற கேள்வியை அவர்கள் யாருமே கேட்பதில்லை. என்ன அபத்தமான ஆய்வு! அப்படிப் போனால், இந்தப் பிரச்னைக்கு எப்போதுதான் தீர்வு காணமுடியும்?

### தமிழ் முஸ்லிம் ஒற்றுமை

9 ஜூலை 1992, கொழும்பு

முஸ்லிம் - தமிழ் மக்கள் உறவில் கிழக்கு மாகாணத்திலிருந்து சில நம்பிக்கையூட்டும் கதைகளைக் கேள்விப்பட்டேன். கோமாரிக்கு அருகில் முஸ்லிம், சிங்கள பயணிகள் பிரயாணம்செய்த பஸ்ஸிலிருந்து தமிழர்களை இறங்கும்படி புலிகள் கேட்டபோது, அதனை மறுத்த இராஜகுலேந்திரன் என்ற தமிழ் இளைஞனை முதலில் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

இதேபோன்று, மட்டக்களப்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட ஒரு ரயில்வண்டி சத்துருக்கொண்டானில் ஆயுதக் குழுவால் நிறுத்தப்பட்டது. ரயில் வண்டியிலிருந்து சகல முஸ்லிம்களையும் இறங்குமாறு அவர்கள் கூறியதும் ஆண்களைத் தங்களது இருக்கைகளுக்குக் கீழ் ஒளிந்துகொள்ளுமாறு கூறியும், முஸ்லிம் பெண்களுக்கு தங்கள் பொட்டை நெற்றியில் வைத்தும் அவர்களது குழந்தைகளைத் தங்களின் கைகளில் ஏந்தியும் முஸ்லிம் மக்களை தமிழ்ப் பயணிகள் காப்பாற்ற முனைந்துள்ளனர். மேலதிகமாக ஆயுதக் குழுவினர் அங்குவந்து சேராத நிலையில், அவர்கள் தங்கள் திட்டத்தைத் தொடரமுடியாமல் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். அதன் பின்னரே ரயில் அங்கிருந்து புறப்பட்டது. இந்தச் செய்தி, அரசாங்க பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் முதல் பக்க செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மையானது என்று தெரியாவிட்டாலும், இது நல்ல விஷயமே. கிழக்கில் இன ஒருமைப்பாட்டை முன்னேற்றுவதில் அரசாங்கம் ஆர்வம் கொண்டிருப்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

# பிளேட்



வாழை மரத்தெச் சுத்தி, கால் இறுகிக் கயித்துடன் அவதிப்பட்டுக் கிடந்தது சாவல் கோழி. நானும் தம்பியும் சோறு கறி ஆக்கி விளையாடுகிற இடத்தில கோழியக் கட்டிப்போட்டிருந்தாங்க.

உம்மா பிழிஞ்ச தேங்காப்பூவ கோழிக்கு ஒரு தட்டில கொட்டியிருந்தாங்க.

வாளில தண்ணி எடுத்திட்டு பலாமரத்தடிக்குப் போற வாப்பாட கையில கத்திரிக்கி. முண்டுக்கல்லில கத்தி தீட்ற சத்தம் கேட்குது. எனைக்கிண்டா காது கூசுது. ரெண்டு காதையும் பொத்திக் கிட்டென்.

என்ட அல்லாவே! நான்தான் இண்டைக்கிம் கோழியை அறுக்கிறதுக்கு பிடிக்கணும். தம்பியைப்போல எனக்கு கொஞ்சமும் அது விருப்பமில்ல. ஏனிண்டா, கோழியைச் சமைச்சிச் சாப்பிடும்போது அறுக்கிறதுதான் ஞாபகத்தில வரும். என்ன செய்ற இப்பெ? அறுக்கக்குள்ள கண்ண மூடிடனும்.

வாப்பா கூப்பிட்டார். நானும் தம்பியும் கோழிர கயித்த அவிழ்த்தோம். நான் சிறகில பிடிச்சி அமுக்கினன். தம்பி கால்களைப் பிடிச்சிருந்தான். அடித்தொண்டையிலிருந்து சாவல் கோழி வழமைக்கு மாறாக் கத்தியது. பாவம், நல்ல இளந்தாரிப் பாணிச் சாவல் என்று வாப்பாவிடம் தம்பி சொன்னான்.

வாப்பா கோழிய மல்லாக்கப் பிடிச்சி அவர்ர பக்கம் இருந்த அதன் சொண்டப் பிரித்து தண்ணீர் பருக்கினார். தொண்டையிலிருந்த சதைய சற்றுக் கிள்ள உயர்த்திப் பிடித்தவர், கால்களை இறுக்கமாக என்னைப் பிடித்துக்கொள்ளச் சொன்னார். இப்ப கோழியின் கழுத்தில் கூரான கத்திய வைத்து தக்பீர் சொல்லியபடி விடாமல் அறுத்தார். ரத்தம் என் சட்டையில தெறித்தது. மரத்தடியில கையை விடாமல் கோழிய கீழ வச்சதும், இறக்கைய சடசடவென அடித்து சாவல் துடித்திச்சி. அறுபட்ட கழுத்தோட பாய்ந்து எழும்பி, பக்கத்து வேலியெல்லாம் மோதி ரத்தம் கொட்டி ஈரமண்ணுகுள்ள கிடந்ததெ பார்ப்பதுக்கு கவலையா இருந்திச்சி.

வாப்பாவே கோழிய உரிச்சி கழுவி உம்மாட்ட குடுப்பார். உம்மாவின் கோழிக்கறியும் மஞ்சச்சோறும் தின்னுவதை நினைச்சாலே நாக்கு ஊறுது. நாங்க ரண்டுபேரும் எங்கட விளையாடும் இடத்துக்கு திரும்ப வந்து விளையாடத் தொடங்கினம்.

தம்பி கேட்டான் "ராத்தா, கடை வைப்போமா? சோறு கறி ஆக்குவமா?'' "நாமளும் இண்டைகி சோறாக்கி விளையாடுவம்'' என்றேன். கறி ஆக்குவதற்காக கொச்சிக்காய்த்தூள் இடிச்சி தரச்சொன்னேன். அவன் சிரத்தையுடன் பெரிய செங்கல்லின் நடுவில் சிறிய செங்கல் துண்டொன்றை உரஞ்சி உரஞ்சி தூள் தயார் பண்ணிக்கொண்டிருந்தான்.

அந்நேரம்தான் "வெள்ளத்தம்பியர்ர சல்மாட வீடு இதானா?'' என்று சத்தமா கேட்டபடி பெத்தா ஒருவ வந்தா. இதுதான் என்றேன். ஆ, நான் இரண்டு மூணு ஊடுலா தேடிப்போட்டு வாறன் என்று சிரித்தா. பெத்தாட முகம், சதையெல்லாம் சுருங்கி கோடு கோடாய் தொங்கி கிடந்திச்சி. வெத்தல போட்டு சிவந்த நாக்கு வெளிய தெரியும்படி உம்மாவ திருப்பி கூப்பிட்டா... "உம்மா புதுத் தங்கச்சிக்கு பால் குடுக்காங்க; சாப்பறைக்குள்ள போய்ப் பாருங்க'' என்று பெத்தாவ ஊட்டுக்குள்ள அனுப்பிட்டு நான் மற்ற வேலைகள செய்யத் தொடங்கினன்.

வேலி முருங்கை மரத்தில இலை கொஞ்சம் ஆஞ்சேன். விழுந்து கிடந்த விழிமாங்கா பழங்களையும் ஒரு சிரட்டைக்குள் பொறுக்கி எடுத்தேன். வேறொரு சிரட்டைக்குள் கறியக் கூட்டினேன். மண்ணடுப்பில் வச்சி கம்புக் குச்சியால் கிளறிவிட்டு... கிளறிவிட்டு கறி ஆக்கினேன். நேத்தய பீட்ரூட்




**உம்மாவும் அந்தப் பெத்தாவும் முக்காட்டுக்குள்ளால் குசு... குசு என்று பேசிக்கொண்டிருந்தார்கள். உம்மா எல்லாத்துக்கும் தலையாட்டிக்கொண்டிருந்தா. நான் தொட்டிலில் உறங்கிய தங்கச்சிய தொட்டுப் பார்த்தன். அவள் குட்டி ரோசாப்பூப்போல நித்திரையில் இருந்தாள். ரோஸ் நிறமான சின்ன முகமும் எலிக்குஞ்சைப்போல சுருண்ட விரல்களும் வடிவான மூங்கில் குருத்துப்போல கால்களும், என்ன செப்பம்... தொட்டிலை நான் மெதுவாக ஆட்டிவிட்டேன். மெல்லிய கீறுபோல சிரிப்பொன்று அவள் முகத்தில் தெரிந்தது**

**அந்த நாசமத்துப்போன கிழவிய அல்லாஹ் நரகத்தில்தான் தூக்கி எறிவான்**

கிழங்கிட மிச்சம் மீதிய தண்ணீருக்குள் விட்டு நல்லாக் கழுவி சிவந்த நிறமான நீரை சர்பத்துக்களாக போத்தல் மூடிக ளில் ஊத்தினேன். வெள்ளக் குருத்து மணலில் கொஞ்சமா அள்ளி சீனியாம் என்று அதனுள்போட்டு கலந்து வைத் தேன். கறி கொதிச்சிட்டு இருந்திச்சி. தம் பிய கொச்சிக்காய்த்தூள் தரும்படி சொன்னன். அவன் ஒரு பேப்பர் துண் டில செங்கல்தூளை எடுத்து வந்தான். அத வாங்கி கொதிக்கும் கறிக்குள்ளே கொட்டி கொஞ்சம் தண்ணீரும் ஊத்தி னேன். முகத்த சுருக்கிக்கொண்டு "இப்ப கறி உறைக்கப்போகுது ராத்தா... கூடயா தூளைப் போட்டுட்டா'' என்றான்.

"நீ சும்மா கிடவன், நான் சோக்காத் தான் ஆக்கிறன். சரி... சோறு கறியெல் லாம் ஆக்கி முடிஞ்சிட்டு... இனிச் சாப் பிடலாம் வா... வா...'' என்றேன். அவன் சந்தோசமாக சிறிய வாழை இலைத் துண்டுகளை வாசல் குருத்து மணல் மேல் வடிவா விரிச்சிப் போட்டான். நான் கோபித்துக்கொண்டால் விளை யாட்டு இடையில குலஞ்சுபோயிடும் எண்டு நினைச்சு தம்பி என்னுடன் இரக்கமாகவும் அவதானமாகவும் இருந்தான். ரெண்டுபேரும் மண்ணி லேயே இரிந்து சாப்பிட ஆரம்பித் தோம். அவன் களிசனில் பட்டன் இல் லாததால் ஓட்டைக்குள்ளால 'குஞ்சு' எட்டிப் பார்த்தது. எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு தப்பிக்கு சாப்பாடு போட்டன். அவன் விரல்க ளால் மணலையும் செங்கல்தூள் போட்ட விழிமாங்காய்க் கறியையும் பிசைந்து சும்மா சும்மா வாய்க்கருகே கொண்டுபோவதும் பின்பு கீழே வைப் பதும் ஸ்... ஸ்... என்று வாயை உறிஞ்சி சாப்பிடுவதுமாக இருந்தான்.

"உரமா ச்சாக்கொட்டிறியே, ரசமா இருக்கா'' என்றேன். ம்... ம்... நல்ல ரசம்... உம்மாட கறிபோலயே இருக்கு ராத்தா என்றான். சாடயா உப்புத்தான் கொஞ் சம் காண லா? என்றுட்டு என்னைப் பார்த்தான். "அது பரவால்ல, எனக்கு கணக்காத்தான் இருக்கு. கெதியா சர் பத்த குடிச்சிட்டு எடு. வாப்பா வாறதுக் கிடையில தண்ணி வாக்கனும் நாம'' எனச் சொல்லிவிட்டு சர்பத்தைக் குடிப் பதுபோல பாவனைசெய்து வாய்க்கரு

கில் கொண்டுவந்தேன். ஒருவித அவிந்த நாத்த வாசமே வந்திச்சி. அத தம்பிக்கு காட்டிக்கொள்ளாமல் சாட்டுக்கு குடிப்பதுபோல நடிச்சன். அவனும் குடிக்கும்வரை காத்திருந்தேன். தம்பியின் முகம் சர்பத்தை எடுத்ததும் "செப்பமில்ல... சீய்'' என்பதுபோல கோணினாலும் ஒன்றுமே சொல்லவில்லை அவன்.

"எஹாய்...'' என்று இழுத்து ஒரு பென்னாம்பெரிய ஏவுறையை சத்தமாக விட்டான். அது, வாப்பா சாப்பிட்ட பிறகு விடுற சத்தம்போலயே இருந்திச்சி. வயிறு நிரம்பிட்டு, போதும் என்று எழுந்துவிட்டான். வெயில் முகத்தைச் சுடத் தொடங்கியதும் இருவரும் விளையாட்டுச் சாமாங்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினோம். தம்பியிடம் நீ கிணற்றடிக்கு தண்ணி வாக்கப் போ. நானும் தண்ணி வாக்க வாறன் என்றுட்டு, வீட்டுக்குள்ள ஓடினேன். உம்மாவும் அந்தப் பெத்தாவும் முக்காட்டுக்குள்ளால் குசு... குசு என்று பேசிக்கொண்டிருந்தார்கள். உம்மா எல்லாத்துக்கும் தலையாட்டிக்கொண்டிருந்தா. நான் தொட்டிலில் உறங்கிய தங்கச்சிய தொட்டுப் பார்த்தன். அவள் குட்டி ரோசாப்பூப்போல நித்திரையில் இருந்தாள். ரோஸ் நிறமான சின்ன முகமும் எலிக்குஞ்சைப்போல சுருண்ட விரல்களும் வடிவான மூங்கில் குருத்துப்போல கால்களும், என்ன செப்பம்... தொட்டிலை நான் மெதுவாக ஆட்டிவிட்டேன். மெல்லிய கீறுபோல சிரிப்பொன்று அவள் முகத்தில் தெரிந்தது. "இஞ்ச உம்மா, பிள்ள என்ன வடிவா சிரிக்குது'' என்றேன். "அது மலக்குகள் பூ கொடுக்காங்க மனே'' என்றா பெத்தா. சரி, தங்கச்சி படுக்கட்டும்... கதச்சி... கதச்சி... அரட்டவேணா'' போய் தம்பியோட தண்ணிய வாருங்க மகள்'' என்றா உம்மா.

"இந்த பொத்தா யாரு உம்மா...'' என்று கேட்டேன். பிள்ளைக்கு ஊதிப்பாக்க வந்திருக்காங்க என்றா. தங்கச்சிக்கு காய்ச்சல் ஒண்டுமே இல்லையே... அப்ப எதுக்கு ஊதிப்பாக்கிற? எனத் திருப்பிக் கேட்டேன். "கொள்ளயா கத கேட்காம சொன்னதச்செய் பார்ப்பம்'' என உம்மா கோபமாய்ச் சொன்னா.

நானும் தம்பியும் கிணத்தடியில் இருந்த சிறிய தொட்டியில் நிரம்பிய தண்ணீருக்குள் விழுந்து, விளையாடி விளையாடி தண்ணி வாத்தோம். ஆமை ஊர்ந்து ஊர்ந்து விளையாடினோம். பழுத்த பலா இலைகளைப் போட்டு மீன் பிடித்தும் விளையாடினோம்.

வாப்பா சந்தைக்குப்போய் வந்து சாயமணையில் இளைப்பாறுவதற்காக சாய்ந்திருந்தார். நானும் தம்பியும் குளித்து முடித்துவிட்டு ஒரே ஓட்டமாக வீட்டுக்குள் ஓடினோம். தம்பியைக் கண்ட பெத்தா குஞ்ச காட்டிட்டு ஓடுறான்டா என்ட பேரன், சீ..! என்று சொல்லி முக்காட்டால் முகத்த மூடிச் சிரித்தா. இவனுக்கு 'சுன்னத்துக் கல்யாணம்' கெதியா வைக்கணும் பிள்ளேய்... என்று உம்மாவிடம் கூவினா. தம்பி கோபத்துடன் வந்து என்னிடம் "நான் இப்படியே காட்டிட்டுத்தான் கிடப்பன்'' என்றுட்டு, கொடுத்த உடுப்பை மூலையில தூக்கி எறிந்தான்.

உம்மா குட்டித் தங்கச்சிய கழுவுவதற்கு சுடு தண்ணி எடுத்து வைத்துக் கொண்டிருந்தா. திண்ணையில குளிக்காமல் இண்டைக்கு அறைக்குள்ள தண்ணிவாக்கப் போறிங்களா உம்மா? எனக் கேட்டேன். அதற்கு என்ன கிட்ட ரகசியமான குரலில் கூப்பிட்டு யாருக்கும் கோட்காம காதுக்குள்ள மெதுவா "நல்ல பிள்ள மாதிரி தம்பிய கூட்டிக்கிட்டு பெரியம்மா வீட்டுக்குப் போயிட்டு வாங்க... இருவருக்கும் காசு தருவன். கொஞ்ச நேரம் ஊஞ்சல் விளையாடிட்டு வாங்க...'' என்று சொன்னா. "எனக்கு ஏலா... எனக்கேலாம்மா...'' என்று சிணுங்கினேன். என்ன முதுகில் பிடிச்சி... சொன்னதக் கேளு என்று தள்ளிவிட்டா. வாப்பா இருந்ததால் நான் சசத்தம்போடல்ல. திரும்பத் திரும்ப என்ன எதுக்கு உம்மா துரத்தி விடுகிறா என யோசித்தபடியே தம்பிய சமாதானம் செய்யப்போனேன். அவன் இப்பவும் கால்கள அகட்டிப் போட்டவனாக முகத்தை நீட்டிக் கொண்டு அழுதுகொண்டிருந்தான்.

உம்மா தந்த காசை தம்பியிடம் கொடுத்து உடுப்பையும் அவனுக்கு போட்டுவிட்டேன். தம்பியிடம் கடைக்குப்போய் உனக்கு விருப்பமான உதக்காய் விளாங்கா வாங்கிச் சாப்பிடுகிளி... நல்லபிள்ளலா... கொஞ்சநேரம் பெரியம்மா வீட்டபோய் விளையாடு. நான் சுணங்கி வாறன், சரியா? என்று அவனை சமாளித்து அனுப்பிவைத்தேன். நான் சத்தம்போடாம அந்த அறைக்குள்ள கதவைச் சாத்திக் கொண்டு ஒளிச்சிருந்தன்.

தங்கச்சி எழும்பி குழர்ற சத்தம் கேட்டிச்சி. வழமையா அவள் குழறினா உம்மா என்னத்தான் கூப்பிடுவா. இல்லாட்டி வாப்பாவத்தான் கூப்பிடுவா. இந்த வாப்பா ஏன் ஒன்றும் தெரியாத மாதிரி இருக்கிறார் என்று யோசனையாக இருந்தது.

பெத்தாவும் உம்மாவும் தங்கச்சியின் அறைக்கதவை பூட்டிக்கொண்டார்கள். தொடர்ந்து அழுதுட்டே இருந்தாள். நேற்று உம்மா சொன்னா "தங்கச்சிட நாற்பதாம் நாளுக்கு உனக்கும் தம்பிக்கும் புது உடுப்புத் தாற. கோழிக்கறியும் கல்யாணச் சோறும் ஆக்கிற என்றெல்லாம் சொல்லிட்டு அதையெல்லாம் செய்யாம கதவ பூட்டிக்கிட்டு என்னான் செய்றாவோ? தங்கச்சிட குழறுவ கூடிக்கிட்டே போகிறது. விறைச்சி விறைச்சி குழறும் சத்தம் கேட்கயில் எனக்கிண்டா உயிர் போயிடும்போல் கஷ்டமா இருக்கி. உம்மாட குரலைவிட அறையிலிருந்து அந்தக் கிழவியின் குரல்தான் கேட்குது.

வாப்பாவோ வாசலில் போய் நின்றுட்டு சிகரெட்டை அவசர அவசரமாக ஊதுகிறார். கதவுட இடைவெளியால பார்த்துக்கிட்டிருந்தேன். உம்மா திடீரென கதவைத் திறந்து ஓடி வந்தா. வாப்பாவக் கூப்பிட்டு "இஞ்ச... நல்ல புது பிளேட் ஒண்டு கெதியா தாங்க'' என்று கேட்டா. அவர் உடனே வந்து கிணத்தடி பூக்கல்லுக்குள் கையவிட்டு அவரது சேவிங் பெட்டிக்குள் இருந்து எடுத்துக் கொடுக்க... உம்மா குழறிக் கொண்டு உள்ள திரும்பி ஓடுறா. தங்கச்சிட குரல் வீறிட்டுக் கேட்கிறது. உம்மா வெளியே வந்து ஜன்னல் கம்பியில தலையை முட்டி முட்டி குழர்றா. எனக்கும் குழறுவதான் வருகிறது. வாயைப் பொத்திக்கொண்டு சத்தம் வராம குழறிட்டே நிண்டேன். ஏதோ ஒரு பயத்தில என்ட கால்களும் நடுங்கியது. அந்த நாசமத்துப்போன கிழவிய அல்லாஹ் நரகத்தில்தான் தூக்கி எறிவான் என மனசுக்குள்ளே முனிகிறேன். சிறிது நேரத்தில் கதவைத் திறந்து "முடிஞ்சிட்டு, ஒரு பிரச்சைனயுமில்ல மகளே'' என்றபடி அழுகின்ற என் தங்கச்சியை உம்மாவிடம் கொடுக்கின்றா. ஏங்கி... ஏங்கி... கத்தி குழறினதால தங்கச்சிட குரல் கம்மி தேய்ந்துபோயிட்டு. உம்மாட தோளில் அறுத்த கோழியின் கழுத்துப்போல தங்கச்சிட தலை கெழிஞ்சி கிடக்கு.


"முதல்ல தண்ணிய வாரு புள்ள'' என கிழவி சொல்ல, உம்மா சரி மாமி என்று எழுந்து ஒரு வட்டாவை கொண்டு வருகிறா. அதில வெத்தில, பாக்கு, பழம், காசு, துணி எல்லாம் இருக்கி. அதை கிழவிக்கிட்ட கொடுக்கிறா. எல்லாத்தையும் சுருட்டி வேக்கில் போட்டு எடுத்துக்கொண்டு "அல்லாஹ் ரஃமத்துச் செய்யட்டும்; நான் போய்வாறன்'' என்று முந்தானையால ஒரு நீண்ட முக்காட்டை இழுத்துப் போட்டு வெளியேறிப்போகிறா. ■

# To Buy or Sell Real Estate.....

## To Buy or Sell your Home for the Right Price please call me...

**RED CARPET.**® Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**# 1 Team in North America**




**Trusted for Service and**
**Respected for Results**



**Karu Kandiah** FRI. CRES,
Real Estate Broker / President
Cell: 416-616-7278
Bus: 416-284-5555 (24 Hrs.)
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6


23 YEARS Service

**Looking for a New Real Estate Career**
**Free Real Estate Coaching**

- Help & guidance for newly licenced agents
- Regular Sales Training from Experts

# தீபாவளிப் பந்தயம்





இந்த ஆண்டு தீபாவளி கோடம்பாக்கத்தைப் பொறுத்தவரை சரவெடிதான். விஜய், சூர்யா, தனுஷ், சிம்பு ஆகியோரின் படங்கள் களமிறங்க காத்திருக்கின்றன.

இவற்றில், சூர்யா நடித்திருக்கும் '7ஆம் அறிவு'க்கான எதிர்பார்ப்பு எக்கச்சக்கமாகக் கூடியிருக்கிறது. வரிசையாக அவர் பெற்றுவரும் வெற்றிகள் அவர் படத்தின் மதிப்பைக் கூட்டியிருக்கின்றன. படத்துக்கான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் மட்டுமன்றி விநியோகஸ்தர்கள் மத்தியிலும் கூடியிருக்கிறது. சென்னை நகர தியேட்டர்கள் மூன்றுக்கு 7ஆம் அறிவு படத்துக்காக ஒன்றே முக்கால் கோடி முன்பணம்கொடுத்திருக்கிறாராம் ஒரு தியேட்டர் அதிபர். மூன்று தியேட்டர்களுக்கே இப்படி என்றால்...?

இதே தினத்தில்தான் விஜய் நடித்திருக்கும் வேலாயுதம் படமும் வரப்போகிறது. ஜெயம் ராஜா இயக்கியுள்ள இந்தப் படத்தில் ஜெனிய்லியா, ஹன்ஸிகா என்று இரண்டு நாயகிகள் நடிக்கிறார்கள். பொதுவாக, விஜய் படங்களை ஆர்வத்தோடு வாங்கும் தியேட்டர்காரர்கள் இம்முறை அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்று சொல்லப்படுகிறது.

விஜய், சூர்யா தவிர, தனுஷும் சிம்புவும் தீபாவளிப் பந்தயத்தில் குதிக்கிறார்கள். செல்வராகவன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் 'மயக்க என்ன' படமும் தரணி இயக்கத்தில் சிம்பு நடித்துள்ள 'ஒஸ்தி' படமும் வெளியாகின்றன.

இவற்றைத் தவிர ஓரிரு படங்கள் வெளியாகக்கூடும் என்றாலும் இந்த நான்கு படங்களுக்கிடையில்தான் போட்டி என்று சொல்லலாம். இவற்றில் எந்தப் படம் அல்லது படங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் என்பதை இப்போது சொல்லமுடியாது. ஆனால், ரசிகர்களின் எதிர்பார்ப்பு, திரையரங்கங்களின் ஆர்வம் ஆகியவற்றை வைத்துப் பார்த்தால் 7ஆம் அறிவுதான் இப்போதைக்கு முன்னணியில் உள்ளது.




# வதந்திகளுக்கு ஓய்வு

ரஜினிகாந்த் நடிக்கவிருக்கும் 'ராணா' பற்றி தினமும் குறைந்தது இரண்டு செய்திகளாவது வந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை வெறும் வதந்திகள். இந்த வதந்திகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைப்பதுபோல இப்போது ராணாவைப் பற்றிய அதிகாரபூர்வ செய்தி வந்திருக்கிறது. படத்தின் தயாரிப்பாளர்களான ஈரோஸ் இன்ரர்நஷனல் மீடியா லிமிட்டெட் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ராணா இப்போதைக்கு தொடங்கப்பட வாய்ப்பு இல்லை. ரஜினியின் உடல்நிலையைக் கருத்தில்கொண்டு படம் தள்ளிப்போடப்பட்டுள்ளது. படப்பிடிப்பு எப்போது என்பது டிசம்பரில் முடிவு செய்யப்படும்.

"ரஜினிகாந்த் முழுமையாகக் குணமடைந்துவிட்டாலும் நாங்கள் அவரை அவசரப்படுத்த விரும்பவில்லை. படத்தில் ரஜினி மூன்று வேடங்களை ஏற்கிறார். மலைக்க வைக்கும் ஸ்டண்ட் காட்சிகள் உள்ளன. எனவே, படப்பிடிப்பை இப்போதைக்கு தொடங்கப்போவதில்லை" என்று இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் கூறியிருக்கிறார்.

இனி, கொஞ்ச நாள்களுக்கு ராணா வதந்திகள் வராது என்று நம்புவோமாக.

# நண்பனும் சதுரங்கமும்




இயக்குநர் ஷங்கரின் 'நண்பன்' படத்தில் விஜய், ஜீவா ஆகியோருடன் இணைந்து ஸ்ரீகாந்த் நடித்துள்ளார். இந்தப்படம் விரைவில் வெளியாக உள்ளது. அதேவேளை, ஸ்ரீகாந்த் நடித்துப் பல ஆண்டுகளாக பெட்டியில் உறங்கும் ஒரு படமும் இப்போது வெளியாகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கரு. பழனியப்பன் இயக்கிய 'சதுரங்கம்' படம் சில காரணங்களால் வெளியாகாமல் இருந்தது. இந்தப் படத்தில் ஸ்ரீகாந்த் பத்திரிகையாளராக வருகிறார். ஷங்கரின் நண்பனில் ஸ்ரீகாந்த் நடித்திருப்பதால், 'சதுரங்கம்' படத்துக்கு தற்போது 'மவுசு' கூடியிருப்பதாக சொல்கிறார்கள்.

"இந்தப் படத்தை எடுத்து முடித்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. வித்யாசாகரின் இனிமையான இசையில் பாடல்கள் நன்றாக வந்துள்ளன. படம் ரிலீஸ் தேதியை நானும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தேன். நாயகியாக சோனியா அகர்வால் நடித்துள்ளார். பத்திரிகையாளரின் வாழ்க்கையை இயக்குநர் கரு. பழனியப்பன் படமாக்கியுள்ளார். இன்றைய ரசனைக்கு ஏற்ற படமாகவும் இது இருக்கும்" என்று நம்பிக்கையோடு கூறுகிறார் 'சதுரங்கம்' பட நாயகன் ஸ்ரீகாந்த்.

சில வரிகளில்

# கால நதி



பிறந்தநாள்

பெ. இராஜநாயகம்

1981இலிருந்து 2006ஆம் ஆண்டுவரை, இருபத்தைந்து ஆண்டுகள் லண்டனிலிருந்து வெளியான 'தமிழ் ரைம்ஸ்' மாத சஞ்சிகையின் ஆசிரியர் திரு பெ. இராஜநாயகம் 75ஆவது வயதை எய்தியிருக்கிறார்.

இலங்கையில் தமிழர்களின் அரசியல் உரிமைக்கான முயற்சிகள் சாத்வீக முறைமைகளிலிருந்து தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஆரம்பிக்கத்தொடங்கிய ஒரு முக்கியமான காலகட்டத்தில், அந்த மக்களின் உரிமைகளை வெல்வதில் ஒரு வெளிநாட்டு உறுதுணையாகும் எண்ணத்தில் உதயமான 'தமிழ் ரைம்ஸ்', உலகளாவிய ரீதியில் பரவலான வாசகர் வட்டத்தைக்கொண்டிருந்தது. ஆரோக்கியமான கருத்துக்களுக்கும், கருத்துப் பரிமாறல்களுக்கும் அது களம் அமைத்தது.

பின்னர் ஏற்பட்ட, மிகுந்த நெருக்கடிகளுடனான காலத்தில், தமிழர் சார்ந்த செய்தித்துறை, ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முழு ஆதரவாக அல்லது முழு எதிர்ப்பாக இயங்கும் துர்ப்பாக்கியநிலையில் சிக்கியது.

நடுநிலை என்பது துரோகம் என்று ஆக்கப்பட்ட நிதர்சனத்தில், 'தமிழ் ரைம்ஸ்' பெரும் சவால்களை எதிர்கொண்டது. நிர்வாகத்தில் ஏற்பட்ட தடங்கலில் அது நிறுத்தப்பட்டாலும், தர்மத்தில் சாய்ந்துவிடாத பெருமையில் அது நிலைக்கிறது. அதில் அமைதிகொள்பவர் திரு இராஜநாயகம்.

தெளிவும், நேர்மையும், துணிச்சலும் மிகுந்த அவரின் ஆசிரிய தலையங்கங்கள், அதில் வெளியான செய்திக் கோவைகள், விவாதங்கள் இந்தக் காலத்தின் மிகப் பெறுமதிவாய்ந்த சாட்சிய ஆவணங்களாக அறியப்படும்.

சட்ட அறிஞரான திரு இராஜநாயகம், மனித உரிமைகளிலும் சமூக அக்கறையிலுமே தன் வாழ்வைக் காண்கின்ற ஒருவர்.

# MARUTHI
## CASH & CARRY

குறைவான விலையில்
நிறைவான பொருள்கள்

15-17 Queensbury Station Parade
Queensbury
Edgware HA8 5NR

**Tel: 020-8952 6655**

## மாருதி எக்ஸ்பிரஸ்

Priority for Quality & Taste

தரமானவை
சுவையானவை



உங்கள் வைபவங்களுக்குத்
தேவையான
அனைத்து
சிற்றுண்டி, உணவு வகைகள்

## Maruthi Express
Take away & Catering

14 Queensbury Station Parade, Queensbury, Edgware HA8 5NR

**Tel: 020-3302 4824**

Dialog

# VIZZ MOBILE

Quality at honest prices

## First time in the UK!

Send
**Airtime Credit**
to your loved ones in Sri Lanka

VIZZ MOBILE SEND CREDIT → Dialog RECEIVE CREDIT



## Need a SIM?

Call our 24x7 order line on 0207 177 2030

# Simply talk

- Keep your existing number
- No hidden charges
- Free 24/7 customer care
- Superior call quality
- Simple clear tariffs
- Competitive national rates

one simple smart plan

# Pay As You Go SIM

## Low-cost international & UK calls

www.dialogvizz.co.uk   0207 177 2000

Top-up in store or online

Customers of **Dialog Vizz** may not be able to purchase top-ups from all retailers that display the **top-up logo.**

top-up  epay  PayPoint  payzone